384

உ

கணபதி துணை.

இந்துஸ்தான், காவடிச்சிந்து, திருப்புகழ்,
பாஸ்கரதாஸ் வர்ணங்களடங்கிய

நிகும்பலையாக மென்னும்

# இந்திரஜித்துவதம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
16 OCT 1928
MADRAS

இஃது

வாங்கூர்-K. சிங்காரவேலு செட்டியார்
அவர்களால் இயற்றப்பட்டு
ஷையூர் K. தர்மலிங்க முதலியாரால்
இராகதாள வர்ணங்களமைத்து
சென்னை-சூளை

வே. ஜெயவேலு முதலியார்

அவர்களாற்றமது,
...பானுமதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

[...ராட்] 1928. [விலை அணா 6.

O-,8M3V4N
N28
121143

உ

கணபதிதுணை.

இந்துஸ்தான் காவடிச்சிந்து திருப்புகழ்

பாஸ்கரதாஸ் வர்ணங்களடங்கிய

## நிகும்பலையாக மென்னும்

# இந்திரஜித்துவதம்

OFFICE OF THE REGISTRAR
No.
16 OCT 1928
MADRAS

இஃது

வாங்கூர்-K. சிங்காரவேலு ரெட்டியார்

அவர்களால் இயற்றப்பட்டு

ஷையூர் K. தர்மலிங்க முதலியாரால்

இராகதாள வர்ணங்களமைத்து

சென்னை-சூளை

**வே. ஜெயவேலு முதலியார்**

அவர்களாற்றமது

ஸ்ரீ பானுமதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்காபிரைட்] 1928 [விலை அணா 6.

C-18 MSV4.N

உ

கடவுள் துணை.

# நிகும்பலையாகமென்னும்

# இந்திரஜித்துவதம்.

121143

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

தங்கமயகோபுரமுந் தானவர்கள் தன்குடியுந்
தங்கிவள ரிலங்கைத்தானாண்ட - கொங்கவிழ்தார்
மன்னன்குமாரன் மகமியற்ற நாடகமாய்
முன்னவனே நீவருவாய் முன்.

## விநாயகர்துதி - கீர்த்தனை.

அய்யா பழனி என்ற வர்னமெட்டு.

சீலா மூஷிகமேறும் நாதா — சிவ
சத்தியகிழும் — வினோதா
மூலாவாமெனக்கு — தாதா
மோனஞானமரைப் — பாதா — சீ
வேலாயுதன் பணியுமண்ணா — உனை
வேண்டினேனே — முக்கண்ணா
நீலமயூரநிரவண்ணா — நினைக்கும
ப்ரணவரூபத் — தண்ணா — சீ
நாதவிந்துவதனிலாடி — நாளுங்
குண்டலியுடன் — கூடி
போதவாழ்வளித்தாயே — தேடி
புகன்றேன்முத்தமிழ்மாலை — கோடி — சீ
சிவத்தைபரமெனவேநாட்டுஞ் — சிங்கார
வேலன் துதியை — கேட்டும்
சிந்தையுருகாதென — வாட்டுஞ்
சிந்தாகுலம தனை — யோட்டும் — சீ

சரஸ்வதிகீர்த்தனை ரூபகதாளம்.

கஞ்சமலர்வாசி கடைக்கண்பார்நேசி
தஞ்சமெனவுந்தன் தாள்பணிந்தேனேநான்
வஞ்சகம்நீக்கியே வந்தருளென்னாவில்
வாணிக்கலைவேணிக்ருபாகரியே ஆதரியே
பாணித்தமிழ்வீணைக்கர மானக்கல்யாணியே கு

முத்தமிழாலுனை நித்தமும்பாடிட
சத்தியேவுன்பாதம் பற்றினேனாதரி
நங்கையர்கள்மகிழ்மேட்டி சிங்காரர்தமிழ்சூட்டி
செங்கமலத்தாள்தருவாய் மங்களகல்யாணகுணை கு

இராவணன்-பிராப்தம்-விருத்தம்.

அண்டமோரெண்டிசை சண்டனும்பயந்திட
வரக்கர்கள் நயந்துபாட
புண்டரீகாக்ஷனும் பூவலோன் புரந்தரன்
போற்றியென்னேவல் செய்ய
தொண்டெனமுனிவர்கள் விண்டெனதிலங்கையில்
தோத்திரஞ்செய்து வாழ்த்த
மண்டலந்தன்னிலே மனிதரின்திரமரிய
மன்னன்ராவணனும் வந்தேன்.

தரு-தாளம்-ஆதி-இ-நாட்டை.

தானவர்குலபதி வானவர்தினந்துதி
தசக்ரீபபன்னன் வந்தேன்.
தானைவீரர்சூழ சங்கொலிமுரசெழ
சந்த்ரசூரியர்தொழ சத்ராதியர்கண்டழ
சததலப்புகழ்ந்திரு லங்கைப்பதிக்கரசன்
மதித்திடும்பேரிள மங்கையர்கரசன் (தா)
தாரணிதன்னிற் சீரணிகொண்டவுதாரன்
தாங்கியசெங்கோ லிருபதுகாகெம்பீரன்
நீரணிரசனினை யடிமரவாதீரன்
நெருங்கியதமையனு மானிடநேயகுபேரன்
நெற்றியிற்பட்டம் துற்றிடபெற்றவன்
வெற்றியிற்சுற்றியே திக்கெலாஞ்சென்றவன்
சேரமகோதர வீரமந்திரியோடு
ஆரபாரமுடன் கூரவிருதுபல
அட்டகெஜங்களும் முட்டிபின்னோடிட
குட்டியேதேவரை திட்டியேசிறைகொண்டு
கிட்டியேகயிலை தொட்டுகலங்கிட
விட்டவன்மட்டில்லா துட்டரைபட்டிட (தா)

கடவுள் துதி-விருத்தம்.

வேதநான்மறைக்குமெட்டா விமலனேபுயங்கவாரா
பாதிமாமதியணிந்த பார்வதிபாகாதியாகா
கோதிலாவமரரேற்றுங் குமரனையீன்றவெந்தா
ஆதியேமுடிவேயெங்கு மடங்கிநிற்பவனேபோற்றி.

மந்திரி-தரு, ரூபகதாளம்.

போற்றிசெய்தேனே லங்கைக்கரசேநான் (போ)
பூதலபாதலமீதி லோதிடுமேதாவியேகின்
போக யேக பாத நீதம் (போ)
சாற்றிபுகழைசார்ந்துன்னடியை மாற்றிமதியைமருவவிதியை
மலரயன்குலவழிந்தவா மகோதரனெந்தனுக்குகந்தவா
மலர்நிரையழகியவாரா மார தீர வீர சூர (போ)

(ம-வ-ம்.) அரசே மகோதரனாகிய மந்திரி வந்தனம் புரிகின்றேன்.

இராவணன் தரு.

வந்தேன்|வந்தேன் மருக என்ற மெட்டு.

கல்யாண் கல்யாண் கல்யாண் மந்திரி
காதலாயென்னுடன் வந்தமர்வாய்

வசனம்.

மந்திரி மகோதரா: நேற்றையதினம் என் குமாரன் இந்திர ஜித்தினால் மடிந்த வானரசைந்யங்களும் மானிடச் சிறுவரிருவரும் சஞ்சீவியால் பிழைத்ததாக சாரணர் உரைத்தனர் ஆதலால் எனது குமாரனாகிய இந்திரஜித்தனையும் பாட்டனாகிய மாலியவானையும் இச்சபைக்கு சீக்கிரம் அழைத்துவருவாயாக.

இந்திரஜித்து பிராப்தம்-விருத்தம்.

கலங்கிடகைலைநாதன் காவலரோடுங்கவென்று
விலங்கிடநிதிக்கோன்றானும் வேலையாற்சூழமிந்த
இலங்கைக்கு அரசாய்நின்ற இராவணன்றவத்தால்வந்து
துலங்கிடுஞ்சிலையில்வல்லோன்: தூயமாசபையில்வந்தேன்.

திரிலோகமென்ற மெட்டு.

எழில்மாரனைப்புகழ் வீரனைமகிழ் யிந்திரஜெயித்தன்னானே
இலங்கைக்கதிகாரன் ராவணன்குமாரன்
கலங்கிடதேவரை காட்டுஞ்சமாரன்
ககனப்பதிகதிரோன்கதி அசலத்துதியணிவான்மதி
கதியாகத்துதித்தோடச் சுதிமாதர்நட்டமாட (எ)

தவத்தினாலேவரந் தான்படைத்தேனாம்
சிவத்தினாலேதிரந் தேடியேஎன்காம்
சிலைகொண்டரதேவர்சிறை அலைகின்றேழவடிக்கும்பரை
திரமானத்தனிவீரன் சரமானதிருதீரன் (௭)

அண்டரண்டபகி ரண்டமதைத்தகி
துண்டருடன்வகி சூரர்க்கானமுகி
துரையாகவேஎண்ணும்படி வுரைவாகியவழகன்முடி
சுரமாதர்ச்சுகலீலை சுகமுடனேமகிழ்காளை (௮)

இந்திரஜித்தன்-தரு, தா-ஆதி.

வந்தனம் வந்தனந் தந்தையேவுன்றாளிணைக்கு வ

இராவணன் தரு.

வாழிவாழிமைந்தனே வந்தமர்வாயென்னுடன் வா

வசனம்

கல்யாணமைந்தா என்னுடன் ஆசனத்தி லமர்வாயாக மந்திரி மகோதரா இன்னும் எனது பாட்டனாராகிய மாலியவான் ஏன் வரவில்லை அறிவிப்பாயாக.

(ம-வ-ம்.) சுவாமி லங்கேஸ்வரா இதோவருகின்றார்.



மாலியவான் பிராப்தம்-விருத்தம்.

சாலகடங்கரென்னும் ·தானவர்மரபில்வந்த
மேலவன்சுகேசன்செய்த மெய்யானதவத்தில்தோன்றி
ஆலத்தையுண்டநாத னருள்தரத்தவத்தைச்செய்த
மாலியவானுமன்றில் மகிழ்வுடன்தோன்றினேனே.

தரு-அடதாளம்.

நாரதாதி யென்ற மெட்டு.

மாதவத்தாலிலங்கையாண்ட மாலியவான்நானே மா
வேதமுதல்வனை வேண்டும்நேயன்
விளங்கத்தவத்தை விளைத்தசேயன்
கோதிலாத குணத்தில்தூயன்
குருவைப்போ லுரைக்கும்வாயன்
குவலயம்நடுங்கிடச்சென்றுசகலருந்தாழ்ந்திடவென்று
நவநவகாட்சியிதென்று நவின்றிடபரவையிகின்று
நலமாகியபதியோங்கிட மயனால்சுரர்மதியேங்கிட
பலமாகியபணிதாங்கிட யிலங்கையெனும்பெயரோங்கிட
பற்றிக்கோல்வெற்றித்தர ரத்னமுடியிட்டதீரன்
சுற்றிப்பணிநற்றிசெய பெற்றேன்வரமுற்றேன்பதி மா

இராவணன்-வசனம்.

வந்தனம் வந்தனம் பாட்டனாரே இதோ ஆசனத்தில் அமரும்

மாலியவான் வசனம்.

கல்யாண் ராவணேஸ்வரா யெனையாதுகாரணமாக இச்சபைக் கழைத்தனை தெரிவிப்பாயாக.

இராவணன் வசனம்.

ஆனல் இவ்விடத்திலமர்ந்திருக்கும் யாவரும் யான் சொல்லு வதை கவனமாய் கேட்பீராக.

இராவணன்-தரு.

வேலவா பழனிவாழ் என்ற மெட்டு.

கேளாய்மகோதரா கேளாய்மகோதரா கே
நாளாய்செகம்புகழ பாலா அகமகிழ
நாட்டையாண்டோம் பாட்டா குரங்கின் கூட்டத்தாலே
மூட்டதணலை கே

தொகையரு.

நாடியிவ்விலங்கைமேலே நகைத்திடவந்ததாலே
நவிலுமென்மைந்தனலே
நாசமாய்போனதெல்லாம் நலமுடன்
பிழைத்ததாலே.

அனுபல்லவித் தொடர்.

நகரமிதில்பிழைக்க நாகநாட்டார்பழிக்க
நானிருந்திடேன் சேனையோடு மானிடர்களின் வூனையழிப்பேன் கே
மாருதியெனுங்குரங்கால் மருந்துமலையரங்கில்
வரவுஞ்சேனைபொவுமுயிரை யிரவிற்சாரணாறிந்துரைத்தனர்

தொகையரு.

மனமதுமயங்கினேனே மனிதரால்நொந்திட்டேனே
மலைபோன்றசேனையைத்தானே
மடிந்ததாய்க்கடலில்
மறைந்திடத்தள்ளிவீனே.

அனுபல்லவித் தொடர்.

வருத்தமடைகின்றேனே வஞ்சகத்திற்குள்ளானேனே
மருத்துஅவரை சிரத்தையருத்து கருத்துமகிழ்வேன்பெருத்த
புவியில் கே

### இராவணன் வசனம்.

கேளாய் பாட்டனாரே நம்மீதுபோர்செய்யும் மானிடச்சிறுவரிருவரையும் அன்னவர் சேனைகளையும் நேற்றையதினம் என்குமாரனாகிய இந்திரஜித்து நாகபாசக்கணையால் கொன்றான் அன்னவர்கள் யாவரும் அனுமனால் கொண்டுவந்த சஞ்சீவியால் பிழைத்ததாக தூதுவரால் சொன்னதுமன்றி நமது கோட்டையின் நாலுபுரத்திலையும் குரங்குகளின் ஆரபாரங் கேழ்கின்றது. ஆனதால் இன்றையதினம் நானே சென்று அவர்கள் யாவர்களையுங் கொன்று வருகிறேன் விடையளிப்பீர்.



### மாலியவான் - தரு.

### செந்தமிழுலகினில் என்ற மெட்டு.

திகழுமிலங்கைநகர் சேர்ந்தரசாய்விளங்கும்
செல்வத்திருப்போரா சிறுமனிதர்
செருச்செய்யவில்லைபாராய்
செந்திருநாதன் வந்தொருவடிவாய்
மந்திரிகளோடு தந்திரமாக
செய்கின்றாரிது தப்பா க்ஷணத்திலின்று
சென்றுமேருவுக்கப்பால் தி

அஞ்சாமலனுமந்தன் சஞ்சீவிகொண்டுவந்தான்
அவனுக்கிலங்கையழிக்க அரிமேதாவல்ல

அகத்தின் வண்ணம்முடிக்க
அரனயனரியொடு குரக்கினவனுமனை
ஒருவனைச்சேர்த்து அரைந்திடவொப்பும்
அழிந்தவரக்க ரெல்லாம் இனிபிரந்தா
லாகுமோ அவரைவெல்ல தி

மரிகடல்குடித்துவானை மண்ணெடுமெரிக்கவல்ல
எரிபடையரக்கரெல்லாம் இரந்தனர்கள்
இருப்பவரிறுவரல்லால்
இனியொரு துணையிலை தனிப்பெரும்வாளியால்
முனமொருகவியை முடித்திட்டவீரனை
எதினிவெல்லப் போமோ இளங்கொடியை
யிப்பொழுதேவிட்டால் போமோ தி

மாலி-வசனம்.

அப்பா லங்கேஸ்வரா இறந்தசேனைகளை யெல்லாம் சஞ்சீவியால் பிழைப்பூட்டிய அனுமனுக்கு இவ்விலங்கையை யழிப்பது ஒருபெரிதல்ல அன்றியும் ராமலட்சுமணர்களை மனிதரென்று நினைக்கவேண்டாம் அவர்கள்திருமாலின் அவதாரமாதலால் இறந்தநமது சேனைகள் யாவும் பிழைத்தாலும் அவர்களைவெல்லுவதரிது இப்பொழுது நீயும் உனது குமாரனாகிய இந்திரஜித்துமே பிழைத்திருக்கிறீர் இனி யுத்தத்தை நிறுத்தி சீதையின் சிறைநீக்கி வாலியை வதைத்தவீரன் பாதத்தை வணங்கினால் நமக்கு க்ஷேமமுண்டாகுமப்பா கண்மணி.

இராவணன் - தரு.

## போம் போம் என்ற மெட்டு பின்முடுக்கு.

போ போ மாலியவானே
புரம்பேமரைந்ததா லிரந்தான்வாலியவனே போ

சீ சீ வுன்புத்தியாலே சீதையைநான்விடுவேனே
சேர்த்துசேர்த்துகுரங்கை தேய்த்துதேய்த்துக்கொன்று

தீருவேன்

ஜெகமதிலென்புகழ்பரவிட மனிதரைஜாடுவேன்
தேவரும்மூவரும்பின்னிடத் துரத்திவோடுவேன்
சீதைக்கெனதுதிரமதைச் செப்பிகூடுவேன்
சேர்ந்தஎனதுபந்து ஆர்ந்தநேசர்களெல்லாஞ்சேர

சிறுமனிதர்கூர குரங்கினத்தோடார
வாரமோடமரில் சோரமாய்வென்று
தீரமாயென்கை வாளியால்கொன்று
தேன்மொழியாளைச் சேருவேனின்று போ

இராவணன் வசனம்.

அஃஆ அடா கிழப்பயலே உன் மதியைக் கொண்டா நான் சீதையை விடுவது வாலியாகிய வீரனை மறைந்திருந்து அம்பேவி கொன்றதால் அவன் ஒருவீரனுவானு இதோ நான்சென்று அன்னவர்களை கொன்று வருகிறேன் பாரடா கிழப்பயலே.

இந்திரஜித்து தரு.

அண்ணவுலகத்தை வெறுத்து என்ற மெட்டு.

அய்யா அரக்கர்குல வீரா அயன்பால்பெற்ற
அம்போ அழிந்ததினுலே
அரைந்திடப்போமோ மனிதர்களென்று
அமரருமல்ல முனிவருமல்ல
இரைவனேவுன்னிள வல்விபீஷணன்
எண்ணிமொழிந்த கண்ணியவான்களே அ

தொகையரு.

இதிலொருசந்தேகமில்லை எனக்கிதுதிடமேகண்டேன்
இதையிப்போ மொழிவதாலே என்வீரமழியும் விண்டேன்
மதித்துநான் நிகும்பலை மாதேவிவாழ்கயிலையில்
வடதிசைசென்று வருகின்றேன்யாகஞ்செய்து
வருவார் பிழைத்துசேனையெல்லாம்
வருத்தமெல்லாம் வாடியோடு மரிவீர்தானே

இந்திரஜித்து வசனம்.

தந்தா தாங்கள் அவர்களை மனிதர்களென்று எண்ணவேண்டாம் உமது தம்பியுரைத்த மும்மூர்த்தியின் அவதார புருஷரே அவர் ஆனால் நான் அவர்களை யிப்பொழுது புகழ்ந்து பேசினல் என்வீரத்திற்கு இழிவுவரும் ஆதலால் நான் அவர்களைக் கொல்ல நிகும்பலாதேவியின் யாகத்தைமுடித்து அழியாதாதமும், அராத வில்லும்பெற்று வருவதுடன் இறந்த நமதுசேனைகளும் பிழைக்க வரம் பெற்றுக்கொண்டு வருகின்றேன் விடையளிப்பீர்தந்தையே.

இராவணன் தரு-தா-ஆதி.

சரிசரிசரிசபாஷ்ஷீ சாற்றியது மிகவும்பேஷ்
தனையனேவுன்மனதின் வண்ணமே
கனிவுடனே இனிசெல்லுவாய்
தாகத்தைதீர யோகத்தைபெற
யாகத்தைசெய்து மோகத்தைமாற்ற
சாருவாய் கயிலாயமதை மீருவாய் காளியருள் கோருவாய்
கந்தபரிமளஞ் சிந்திடும்வாச
சுந்திரதேக எந்தன்குமார ச

இராவணன் வசனம்.

அப்பா கண்மணி உன்னிஷ்டம்போல் சென்று யாகத்தை முடித்துவருவாயாக.

இந்திரஜித்து தரு.

வன்னத்தினை என்ற மெட்டு.

நம்பிநிகும்பலை யாகத்தை செய்வேன்
அம்பாள்களித்திட யோகத்தை உந்தன்
தம்பிகலகத்தால் மாகத்தை அங்கு
நலியும்படிசெய்தாலதை வலிமேவதுரை சிலையோரால்
நானென்னசெய்குவேன்சோகத்தை வரும்
நாமடையவந்த லோகத்தை

இந்திரஜித்து வசனம்.

தந்தா ஆனல் நான் செய்யும் நிகும்பலையாகத்தை வுன் தம்பியானவர் இராமலக்ஷ்மணருக் குரைத்து யாகத்தை அழித்தால் நாம் வெற்றியடையமாட்டோமென்ற சந்தேக மிருக்கின்றது தந்தையே.

இராவணன் தரு.

சும் சும் பியாரி என்ற மெட்டு.

சூதுக்காரகள்ளனவ ளேதுவானவரிடத்தில்
பார் பார் பார்
ஏதுசெய்வோமதற்கு இப்பொழுதேயோசனையை
கூர் கூர் கூர்

இராவணன் வசனம்.

அடா கண்மணி சூதுக்காரத் திருட்டுப்பயல் ஏதாவது மோசஞ் செய்வான் அதற்குதக்க யோசனையை இப்பொழுதே செய்வாயப்பா கண்மணி.

இந்திரஜித்து விருத்தம்.

அஞ்சிடவேண்டாமையா அரிவையாளுருவைப்போலே
துஞ்சிட அவர்கள்முன்னல் துலைத்து என் வாளால்வெட்டி
வஞ்சமாயயோத்தி செல்ல வழியதைக்காட்டிமீண்டு
நெஞ்சினில் நினைத்தயாக நிகும்பலைசெய்துமீள்வேன்.

இந்திரஜித்து வசனம்,

தந்தையே இதற்க்காக தாங்கள் அஞ்சவேண்டாம் நான் மாயத்தினால் ஓர் சீதையை யுண்டாக்கி அனுமார் முன்னால் கொண்டுபோய் வெட்டி விட்டு அயோத்திக்கு செல்லுவதாய் போக்குக்காட்டி நிகும்பலையாகத்தை முடித்து வருகின்றேன் விடையளிப்பீர் தந்தையே.

இராவணன் வசனம்.

அப்பா எனது குமாரரத்தினமே அப்படியே சென்று காளி யருள் பெற்று வருவாயப்பாகண்மணி.

ஸ்ரீராமர் பிராப்தம் விருத்தம்.

பார்க்கடல்மீதிலன்று பன்னகசயனம்விட்டு
கார்த்திடதேவருக்காய் கௌசலைகெர்ப்பந்தோன்றி
ஆர்த்திடுங்கடலைதாண்டி அரக்கர்கள்தனையேவெல்ல
நேர்த்தியாயிலங்கைதேடி நீலமேகனும்சபையில்வந்தேன்.

தரு.

வடிவேலா சிவன்பாலனே என்ற மெட்டு.

திகழ்ராமன் சபைநாடினேன்ஜெயமுடனே
புகழ்மிகுமேனே போற்றிட சேனே
புவிமீது கவிசூழ்ந்திட போர்க்கோலமாய் (தி)

ஜானகியைவேண்டி சாகரத்தை தாண்டி
தசக்ரீபனைசாய்த்திட தம்பி யோடு (தி)

சுக்ரீபன்தொடர்ந்திட சூரர்க ளழிந்திட
துரைகோதண்டம்மின்னவே சுந்திரமாய் (தி)

வானவர் துயர்தீர வாகையதுதீர
வந்தன்ம் தந்தேனே மகாசபை யோருக்கே (தி)

லக்ஷ்மணர் தரு-தாளம்-ஆதி.

சருணஞ்சருணஞ் சருணமிதோ
தாசரதிவுன் னருள்போற்றி
கருணைசெய்வீ ரண்ணா
கமலமுகா நானேற்றி

ஸ்ரீராமர் தரு.

கல்யாண் கல்யாணிளையவனே காதலாயென்னுளையுமே
வல்லவனேவந்தமர்வாய் வானரர்யாவரும்நற்சுகமா

சுக்ரீபன் தரு.

சுகந்தான்சுகந்தான்சுந்திரனே சுக்ரீபனிதோவந்தனமே
அகமகிழ்ந்தருள்செய்வீர்அனலாலிலங்கையழிந்திடவே

சுக்ரீபன் வசனம்.

சுவாமி ரகுநாதா நமது எழுபது வெள்ளம் வானரசைந்யங்களும் சுகமாக யிருக்கின்றார் இனி லங்கைமீதில் அக்கினியெரிந்து சுட்டழிக்க எங்களுக்கு விடையளிப்பீர் சுவாமி.

ஸ்ரீராமர் தரு

சரிசரிசரிசரியப்படியே சார்ந்திலங்கையழித்திடுவீர்
வருவேன்வருவேனுங்களுடன்வாளிதொடுக்கவாருங்கள்

ஸ்ரீராமர் வசனம்.

அப்பா சுக்ரீபா உங்களிஷ்டம்போல் அக்கினியால் லங்கையை யழிப்பீர்கள் நாங்களும் எங்களுடைய அம்பால் இலங்கை

யின் மாடமாளிகை கூடகோபுரங்களை அழிக்க வருகின்ரு ம்ப்பாசுக்ரீபா.

ஸ்ரீராமர் தரு.

அம்பைதொடுப்போம் வாருங்கள்
அரக்கரழிய சேருங்கள்
அந்தரமோட அரக்கர்யாவரும்
அங்கியைமூட்டி செந்தணலாக்கி
உம்பர்களோங்கி களித்திட
ஓடிலங்கை யழியுங்கள்
அம்பரந்தாங்கி யென்கணே
ஆர்த்திட்டதிதை பாருங்கள்

மாயாசீதை பிராப்தம் - விருத்தம்.

இந்திரஜித்துதானு மிராக்கதியானவென்னை
தந்திரமாயழைத்து தக்கதோர்நீதிசெப்பி
மந்திரத்தாலேயந்த மங்கையினுருவாய்செய்த
சுந்திரமாயாசீதை தோன்றினேன்சபையைநாடி.

தரு.

சாஹேறவாலா என்ற மெட்டு.

மாயாசீதை வந்தனமே
மலர்மிசைவாழயன் குலத்துதித்த
காயாம்பு நிறவண்ணன்
கவலையாலே வாடும்வண்ணம்
கருத்திலுன்னிமாதாக காவலனிந்திரஜித்தோத
திருத்திவந்தே னென்ரூபம்
சேர் சேர் சேர் சேர் மாசபைக்கு
தீர் தீர் தீர் தீர் குறையெனக்கு
கார் கார் கார் கார் சபையோரே
கருத்துமகிழ்ந்து அவையோர்ரே மா

வசனம்.

சுவாமி யெங்களிளவரசே யென்னை யாது காரணமாய் வரவழைத்தீர் அறிவிப்பீர்சுவாமி.

இந்திரஜித்து வசனம்.

அடிமாதே உன்னை அனுமான் முன்னால் கொண்டுபோய் சித்ரவதை செய்வேன் நீயோ சீதையைப் போல் பாசாங்கு

காட்டி உனை மீட்கும்படி அநுமானுக்கு உரைக்க வேண்டும் ஜாக்ரதை:

அநுமார் பிராப்தம விருத்தம்.

அலைகடல்சுவறிவாட அமரர்கள்பயந்துவோட
நிலையிலாவரக்கர்க்கு நின்றுமே யடங்கிதாழ
சிலைவலோர்கண்டுமெச்ச சீவனைத்தந்தவந்த
மலைதனைகொண்டுவைத்து மாருதிசபையில் வந்தேன்.

தரு-தாளம்-ஆதி, இராகம்-அடாணா.

ஆஞ்சநேயன்வந்தேன் அநுமந்தசீலனெனும் ஆ
தாஞ்சிரமேந்திய காமனுதாங்கிய
வாஞ்சனைமிஞ்சிய வாமனுதங்கிய
மான் வழுவிலாத தீரன்
வானவருபகாரன் வாகையணிந்தசீரன்
மண்டலமெண்டிசை கண்டுநடுங்கிட
கொண்டுயிலங்கை மண்டியெரிந்திட
மாரி அசோகவனஞ்சீரி
அழிந்திடவே கோரி
மருந்துமலையதை விரைந்துமேகொண்டு
இரந்தவர்யாவரும் எழுந்திடக்கண்டதை
நின்று மேருவுக்கப்பாற் சென்று
வைத்ததனை மீண்டு
வண்டுகளுரைந்திடுந் தண்டுளபாரன்
தொண்டென கொண்டு
விண்டொருதாரக மந்திரமோடு ஆ

ஆஞ்சநேயர் வசனம்.

அம்மே ஆ நாமிப்பொழுது சஞ்சீவி மலையைக் கொண்டுபோய் வைத்துவிட்டு இந்த யுத்தகளத்துக்கு வருகையில்இந்தபாவியாகிய இந்திரஜித்துயாரோ ஓர் பெண்ணை பிடித்துக்கொண்டுவருகின்றான் அதை யென்னவென்று விசாரிப்போம்.

### இந்திரஜித்து - தரு.

அதட்டுகிறவளாரடி என்ற மெட்டு.

| | |
|---|---|
| கட்டிபுணைப்பிடித் | தோடுவேன் |
| காவலர்கண்டிட | ஜாடுவேன் |
| வெட்டியவர்முன்னே | வீழ்த்துவேன் |
| வீரமெல்லாமோட | தாழ்த்துவேன் |
| வேதன்தடுத்து | போதனைசெய்தாலும் |
| ஆதாரமாகிய | பாதகிஎன்றிதோ |

### மாயாசீதை தரு.

| | |
|---|---|
| ஐயோயென்னை | யடிப்பதால் |
| ஆவதுண்டோ | முடிப்பதால் |
| ஐயன் தூதனாகிய | அனுமனதோ வருகிறான் |
| அஞ்சியவனை | கண்டுபயந்து |
| கெஞ்சிடவேண்டாம் | தஞ்சமென்றானே |

### அனுமன் தரு.

| | |
|---|---|
| வேண்டாம்வேண்டாம் | கில்லடா |
| வீண்பழிவருஞ் | செல்லடா |
| மாண்டாலிந்த | மங்கையும் |
| மண்ணில்புகழ | சங்கையும் |
| வக்கிடுமோரி | வுந்தனைகூரி |
| யிந்திரனைவென்ற | அந்தவீரமறும் |

இந்திரஜித்து தரு.

அடடாகுரங்கே தடுப்பவர்
ஆரோயிவனை விடுப்பவர்
அழியசேனை விடுத்தானே
அவனியழிய கெடுத்தானே
ஆனதால்தந்தை மாணிவனைவிட
நானேயெடுத்து வாளினால்வீசுவேன்

அனுமான் விருத்தம்.

அன்றிந்த லங்கைவந்து அசோகமாவனத்திற்கண்ட
என்னருந்தாயாரான இறைவர்தன்தேவி தன்னை
பன்னருங்கொலையே செய்ய பாதகனெண்ணிவிட்டான்
என்னதான் செய்வேன்ராமா எங்குதேயெந்தனுள்ளம்.

வசனம்.

அஃது எனது தாயாகிய பிராட்டியாரை இப்பாவியாகிய இந்திரஜித்து கொலைசெய்ய எண்ணிவிட்டான் ஆயினும் இவனருகிற் சென்று நமது தாயை விட்டுவிடும்படி இரைந்து கேட்டுக் கொள்வோம்.

தரு-அடதாளம், காம்போதி.

பொருப்பாய் புகழிலங்கையிற்கொண்டவீரனே பொ
நெருப்பாமெனதுதாய் விருப்பமொடுவிடுப்பாய்
பெருத்தபுவியிலினி பெண்பழியலோகொடுப்பாய் பொ
மலரயன்குலத்திலே மைந்தனுய்வந்தாயே
மனுமுறைநீதியெல்லாம் மனத்தாக்கற்றாயே பொ
இரக்கமெங்கேவிடுத்தாய் எடுத்தபெயர்கெடுத்தாய்
இரந்தேனெனதுதாயை இப்பொழுதேகொடுப்பாய் பொ

அனுமார் வசனம்.

அப்பா பிரம்மகுல சிகாமணி நீயெடுத்த புகழிற்கு பெண்ணத்தியாகாது, மன்னித்து விட்டு விடுவாயப்பா.

தர்க்கம்-இந்திரஜித்து-தரு.

குரங்கே போகாமல் நில்லடா என்ற மெட்டு.

என்னசொன்னுயடா குரங்கே நீ
இனிவிடுவேனோ சீதையை
யெட்டநிற்பாயடா கட்டாயமாகவே
வெட்டினேனிவளை சட்டதிட்டமொடு

அனுமான் தரு.

தர்னைவகுல வீரனே
தருமோ யிதுசூரனே
சங்கோலிவீர கங்கணஞ்சேரும்
மங்களநேயா தங்கிடுந்தாயை

இந்திரஜித்து தரு.

தருவதற்கோ வந்தது
அங்கைதமனமோ நொந்தது
சங்கையிலாமல் மங்கையாளையிப்போ
அங்கையால்வெட்டி சங்கடந்தீருவேன்

அனுமான் தரு.

நான்முகன் தவப்போனே
கனிமலர்த் தாரனே
ஞாயமோஇது சேயிழையல்லோ
காயாம்புவண்ணன் களித்திடத்தாரும்

அனுமான் வசனம்.

அப்பா அஷ்டதிக்குபாலகளின் மறுப்பையு மொடித்து கைலையை யெடுத்து காவலரை முடித்து கலங்காமனத்தோனாகிய

இலங்கேசனுக்கு மூத்த குமாரனாய்ப் பிறந்தும் இந்திரனை ஜெயித்து இராவணி யென்னும் பெயரொழித்து மேகநாதனென்னும் பெயரை நிலைக்கவைத்த வில்லாளரிற் சிறந்த கல்விமானே என் தாயாகிய சீதையை விட்டு பெரும் புகழை பூண்பாயப்பா இந்திரஜித்தே.

தர்க்கம்-இந்திரஜித்து - தரு.

## கொண்டாடிப்போம் என்ற மெட்டு.

சீ சீ சீதையைவிடுவேனோ

அனுமான்.

சேயனே யென்னுயிர் விடுவேனே

இ—விட்டாலென்னநஷ்டமாகுமோ

அ—வீண்குலையது கஷ்டமல்லவோ

இ—கஷ்டமெல்லாமிந்த கன்னிகையாலல்லோ

அ—துஷ்டனேவிடு யினியிந்தசொல்லோ

இ—தூக்கினேனிதோ தாக்கிடவேபாராய்

மாயாசீதை - தரு, அடதாளம்-முகாரி.

அனுமானே ஆதரிப்பாய்எனைத்தானே அ

தனுசாளிடமெனை சாரவிடுப்பாயே

சாமியவர்பாதம் தன்னைகொடுப்பாயே அ

வேறுதுணையிலையே வேந்தரைநான்பார்க்க

விதிவலியால்வந்த சதிமொழியைதீர்க்க அ

பாவிகையிற்சிக்கி பரதவிக்கின்றேனே

ஆவிபோகுமுன்னே ஆதரியெனைதானே அ

மூவர் தர்க்கம்.

## தாகம்மாதரசே என்ற மெட்டு.

இ—மாதரசே புலம்புவதேன்

மா—இந்தமங்கையை விட்டுவிடுவீர்தான்

அ—பாதகா பெண்பழிபொல்லாது

இ—நீதியுரைத்தது போதும்வில்

மா—நேயரேஎனைவிட சொல் சொல் சொல்

இ—உன்ஞாயமறிவேன் வா வா வா

அ—சேயா என்மொழி கேள் கேள் கேள்

இ—சீ சீ குரங்கே செல் செல் செல்

மா—சித்தமிரங்கி கார் கார் கார்

இந்திரஜித்து தரு - தாளம் - ஆதி.

பட்டிசிரிக்கிவந்திடாய் வெட்டுவேன்ரத்தம்சிந்திட
பாரடிபாரடியார் எனக்கெதிர்கூரடி ப
அற்றுவிழசிரம்யேற்றினேன் அஞ்சிடயாவருமாற்றினேன்
ஆரடிஆரடிவுனக் காதரவதைக்கூரடி ப
அந்தரபுஷ்பகமேறினேன் அந்த அயோத்தியைநாடினேன்
ஆடுவேன் நாடுவேன் அங்குள்ளவறை எல்லாம் ஜாடுவேன் ; ப

வசனம்.

அடே குரங்கே இதோ யிந்தசீதையை வெட்டினது மன்றி இந்த விமானத்திலேரி அயோதிக்குச் சென்று அங்குள்ளவர்களை யெல்லாம் என்வில்லுக்கிறையாக்கி வருகிறேன்பாரடா.

அனுமான் தரு.

## ஆனாலு மென்போல்பாவி என்ற மெட்டு.

அய்யோயீதென்னகாலம் அம்புவியிலிந்தகோலம்
அன்னைசீதையைக்கொன்றான் அறைவது அனியாயம்
அனியாயமிது அ
ஐயனிடஞ்சென்றிதை அறைவதுநானெதை
பையரவசயனா பரமதயாளகுண அ
அயோத்திநகர்தேடி அரக்கன்சென்றானேயோடி
அமரர்கள்பார்த்திட அதட்டியென்முன்னேநின்றான் அ

அனுமான் வசனம்.

அஃ ஆ ரவிகுலராமா ரட்சிக்குஞ்சோமா பன்னிருநாமா நான் பார்த்திருக்கையிலே என் தாயாகிய சீதையை வெட்டி அயோத்திக்குச் செல்வதாக சொல்லி அந்தரமார்க்கமாய் இந்திரஜித்துசென்றானே நானென்ன செய்யப்போகின்றேன்.

அனுமான் தரு.

## நானேழை என்ற மெட்டு.

நான்பாவி யெந்தன்னுதருக்கெவ்வித
மிதையுரைப்பேன் சர்வேசா
நான்பார்த்திடயென் தாயைவானுலகஞ்சேர்த்தான்
நடுங்குதேயெந்தனுள்ளம்; ரகுராமா நடுங்குந்த.
அரகனயோத்தியை அய்யனேநாடினான்
அங்கென்னசெய்கின்றானோ ராகுராமா

காத்தைசிரம்வைத்து காகுத்தனே உனை
காணவருகின்றேனே ரகுராமா

நாமாவளி.

ராமும் ராமும் ராமும் ராமும் ராமும் ராமும் ராம்
சோமுகாசூரமர்த்தனராம் சூரியகுலத்துதித்தவராம் ராம
திருவாங்கூரிற்வாசகராம் சிங்காரந்தமிழ்பூண்டவராம்
மருவற்ற மாமணியாம் கரிமாணிக்க நன்மணியாம் ராம

அனுமார் தரு.

## திருக்கடையூர் என்ற மெட்டு.

இலங்கைநகர்தனிலே எந்தன் நாதனேனின்றதாலே
கலங்கிடவந்ததையோ இந்த காலத்திலென்னசெய்வேன் இ
நெஞ்சமஞ்சுகின்றதே அதை நினைக்கப்புண்ணுகின்றதே
வஞ்சகஞ்செய்தானே நமது வாழ்நாள்கெடுத்தானே இ
கெஞ்சிநான்கேட்டேனே கெடுத் தாவியையுண்டானே
தஞ்ச மும‌துபாத அய்யா தாமரையேநீதம் இ

ராமர் தரு.

## தெள்ளுதமிழ் என்ற மெட்டு.

என்னகுறைஉனக்கு வீரா
என்னிடத்தோழனே அதை கூறாய்
முன்னமேஇலங்கைவந்து கன்னியரைகண்டுசொன்ன
தன்னிகரில்லாதபெரும் தீரா இப்போ
தானவரால்வந்ததுரை சீறாய்
துயரமிகவுங்கொண்டு வந்தாய் இப்போ

சுந்திரனே உன்மனது நொந்தாய்
சோகம்வரசெய்தவர்யார் தாசுமாசெப்புவாயே
சூரியன்பாலோதியுணர் பாலா அந்த
சுத்தநவவியாக்கரண சீலா

ராமர் வசனம்.

எனது கண்மணியாகிய ஆஞ்சநேயாவுனக்கு இங்குள்ள ராக்ஷதரால் யாதுதுன்பம் நேரிட்டதோ அறிவிப்பாயப்பா கண்மணி.

ஆஞ்சநேயர் தரு.

கானகத்தில் என்ற மெட்டு.

என்னவென்று யெடுத்துரைப்பேன் யெந்தன்ரகுநாதனே
பின்னரியதுயரால்வாட பாவிசெய்தானேகெட என
நெஞ்சமஞ்சுதேவுரைக்க நீலமேகரூபனே
வஞ்சகனிந்திரஜித்தால் வந்ததேபழிநமக்கு என
அன்னைஜானகியாரை அறுத்துசிறம்வீழத்தள்ளி
அயோத்திநகர் தேடிசென்றான்
அய்யோயிதற் கென்னசெய்வோம் என

அனுமான் வசனம்.

சுவாமி ரகுநாதா நான் பார்த்திருக்கும்போதே வஞ்சகனாகிய இந்திரஜித்து எனது தாயாகிய ஜானகி பிராட்டியாரை வாளால் சிரத்தை வெட்டித்தள்ளினான் இனி நாமென்ன செய்யப் போகின்றோம் ரகுநாதா.

ராமர் தரு.

ஆ தந்தையே என்ற மெட்டு.

ஆ சீதையே அரக்கனால்மடிந்தாயோ ஆ
அஞ்சிடவுனைவஞ்சகவன் வெட்டவோ
வெட்டவோவுனை வெட்டவோவுனை கிட்டினேனடி ஆ
உன்னைசிறைகொண்ட அன்னவன்றனைபோக்கவே
போக்கவே வந்தேன் போக்கவேவந்தேன்நீக்கினேனுனை ஆ
சிறையைமீட்கநான் சிந்தித்தேனடிதேவியே
தேவியே யெந்தன் தேவியே யெந்தன் ஆவியாகிய ஆ
தந்தையிறந்ததை யுந்தனாலேநான்மறந்தேனே
மறந்தேனேவுனை மறந்தேனேவுனை துறந்தேனேயிங்கு ஆ
வீரனென்றுநான் வில்பிடித்தேனேவீணனே
வீணனே வெறும்வீணனே வேறுங்காணேனேவுனை ஆ

ராமர் வசனம்.

அடியென் காதலி எனதந்தை யிறந்ததை வுன் சிந்தையின் வேற்றுமையால் மரந்திருந்தேன் இந்த பாவியாகியராவணன் சிறைகொள்ளவும் அந்தச் சிறையை மீட்க வீரனென்று வந்து வுன்னை பரிகொடுத்து கிறகவும் நாளாயிற்றே என்ன செய் வேணடி என் காதலி.

OFFICE OF THE ... No. 16 OCT 1928 MADRAS

இலக்ஷ்மணன் தரு.

பாலா என்னகாலம் என்ற மெட்டு.

அண்ணாவுன்னையுங்கொன்றானே அயோத்திசென்றானே
ஆருந்துணையின்றி பாரிலடித்துநீ
மாருதிபார்த்திட நேரில்விழுந்தாயோ அ

தாயைமறந்துநான் தங்கினேனேவனம்
மாயமானாலேநீ மரித்திடவந்ததோ அ

தனியாகநின்றோமே தாங்குவாரின்றியே
இனிபிழைத்திடோ மேகுவோமந்தரம் அ

லக்ஷ்மணன் வசனம்.

ஆ எனது அன்பார்ந்த தாயே நான் என்னையீன்ற சுமித்திரா தேவியை துரந்து நீரே என்னைபெற்ற தாயென்று உம்முடன் கானகத்திற்கு வந்து உம்மை பகைவர்கையால் கொல்லச் செய்தேன் இனிநான் ஆரைச்சுதமென்று இவ்வுலகவாழ்க்கையிலிருப்பேன்; இதோ நானும் உம்முடன்வருகின்றேனம்மா.

### விபீஷணர் பிராப்தம் விருத்தம்.

கரைமிடற்றண்ணல்தோழன் கனகன்றன்தம்பியர்கி
திரைகடலகழியாகச் சேர்ந்திடலங்கையாண்டு
தரையினிற்ப்புகழேகொண்ட தசக்ரீபன்தம்பியான
குரைவிலாதவத்தில் வல்ல குணத்தவன் சபையில்வந்தேன்.

### தரு.

### மயிலேறி என்ற மெட்டு.

திருநாயகன்பணியை தேடும்விபீஷணன்
சீர்பெருஞ்சபையை நாடினேன் தி
தேருந்தவந்தனில்மிகுந்த செங்கமலத்தோனுல்தந்த
செழிக்கும்வரந்தனையடைந்த தேவர்களுக்கேயுகந்த தி
வேதநெறிமுறையுணர்ந்த விச்சிரவசுவால்வந்த
வேதியன்குலக்கொழுந்தாய் விளங்கராக்கதரெழுந்த தி
தஞ்சமெனராமன்பதம் அஞ்சலெனபோற்றிநிதம்
தாரகமேசீரகமாய் கூரிதினஞ்சேருங்குண தி

### விபீஷணர் தரு.

### ஆண்டவனே பழனி என்ற மெட்டு.

ஆண்டவனே என்னை ஆண்டவனே
தாண்டவஞ்செய்பாதனே சாமிரகுநாதனே
தாள்பணிந்தே னாட்கொள்வீரே
வேட்கிணையான மாலவதாரா ஆ

விபீஷணர் வசனம்.

அ ஆ இதென்ன ஆச்சர்யமாகயிருக்கின்றது அந்தபாவியாகிய இந்திரஜயித்தன் இவர்களை வெல்ல நம்மாலரிதென்று இக்கலகத்திற்கு ஆஸ்பதமானவள் இவளே யென்று நமது தாயாகிய பிராட்டியாரை வதைத்திருந்தாலு மிருக்கும் எல்லாவிஷயங்களையும் ஸ்ரீ ரகுநாயகரை யெழுப்பி அன்னவரிடம் யோசிப்போம்.

விபீஷணர் தரு.

சருணங்குருநாதா என்ற மெட்டு.

எழுந்திருப்பாய் நாதா இணையிலாபொற்பாத
விழுந்திருப்பதோது வெற்றியவர்க்கேது எ
செய்வேனுபசாரம் தீருமபசாரம்
தேவதேவாநீரும் தெளித்தேனெனைப்பாரும் எ

விபீஷணர் வசனம்.

சுவாமி இதோ சைத்தியோபசாரம் செய்கின்றேன் எழுந்து என்முகத்தை பார்ப்பீர் சுவாமி.

இலக்ஷ்மணர் வசனம்.

அ ஆ ஜெகதீசா நமது தாயை கொலை செய்த பாவிகளை என்ன செய்வது அண்ணாவோ அழுதுக்கொண்டிருக்கிறார் நாமும் விசனப்படுவதில் பிரயோசனமில்லை நமது அண்ணாவை தேற்றுவோம்.

இலக்ஷமணர் தரு.

போம் போம் இது என்ற மெட்டு.

அண்ணா துயரப்படலாமா அவ
ராவியழிக்காதுரப் போமா அ
அஞ்சிடராக்கதர் கெஞ்சிடதேவர்கள்
தஞ்சந்தஞ்சமென தாரணிவாடிட
தாக்குவீர்கூற்றுவ னேற்றிடயாவரையும் அ
அரியயனரனோடமரர்க ளெதிர்த்தாலும்
வருகவருகவென்றுவாட்டியவருயிரை யோட்டுவீரவ்வுலகம்
ஆரணவாகமசாரண குருவொடுதாரணிதன்னில்
சிரணிவானவர்தானவர் முனிவர்களொழிந்தாலென்ன அ

லக்ஷ்மணர் வசனம்.

அண்ணு தாங்கள் விசனப்படுவது தகாது இப்பொழுதே அந்த அரக்கரை வதைத்து வருகிறேன் விடையளிப்பீர் அண்ணு

சுக்ரீபன் தரு-தாளம்-ஆதி.

இன்னமும்யோசனையாகுமா யாவரையும்விடப்போகுமா
ஏகுவோம் ஏகுவோம் இலங்கைநகர்மேலேதாவுவோம் இ
அன்னையைக்கொன்றபாவிகள் ஆவியொழித்திடயேவுங்கள்
ஆருவோம் ஆருவோம் அவரைக்கொன்றுதீருவோம் இ

சுக்ரீபன் வசனம்.

சுவாமி நாங்கள் யாவரும் இதோஇலங்கைமீது பாய்ந்து அங்குள்ள அறக்கர்யாவரையும அழித்து வருகின்றோம் விடையளிப்பீர் சுவாமி.

அனுமார் வசனம்.

சுவாமி இலங்கையை யழிப்பது பின்னால் பார்த்துக்கொள்ளுவோம் அந்த வஞ்சகனுகிய இந்திரஜித்து நமது அயோத்தியிலுள்ளவரை யழிப்பதாக புஷ்பவிமானமேறி அயோத்திக்குச் சென்றிருக்கிறுன் அதற்குத்தக்க யோசனை செய்வீர் சுவாமி.

இராமர் வசனம்.

ஹா ஹா ஜெகதீசா. (இவ்விடத்தில்ராமர் மூர்ச்சை.)

ராமர் தரு.

திருநகரயோத்தியிலே என்ற மெட்டு.

அய்யோ அயோத்திமேலே அரக்கனவன்சென்றதாலே
செய்வது நானெதுவோ தீயாகமூணடதுவே அ
தடுப்பது அங்காரோ தம்பிதாய்மாரோடவர்சீரோ
கெடுக்கவேசென்றனே அவன்கிஞ்சிற்றுமஞ்சானே அ
ஆதிபரம்பொருளே அவர்க்காதரவாயருளே
வேதனைப்பட்டிடவோபடைத்தாய் வேதியாகெட்டிடவோ
சஞ்சீவியால்பிழைக்க ஆஞ்சநேயனைத்தானழைக்க
கொஞ்சதூரமல்லவே கோசலநகர்செல்லவே அ

வசனம்.

அ ஆ ஜெகதீசா அந்தப்பாவியால் நமது சகோதரரும் தாய்மாரும் மடிவாராகில் அன்னவர்களை சஞ்சீவியால் பிழைப்பிப்பதற்கு அயோத்திநகர் அருகிலில்லையே என்ன செய்வேன் ஜெகதீசா.

இலக்ஷமணர் - தரு.

ஏன் மயங்குகின்றாயம்மா என்ற மெட்டு.

ஏன் மயங்குகிறீரண்ணா

இந்திரஜித்தையழிக்க எனதண்ணன் பரதர்க்கு
தந்திரங்கள்செய்யவேண்டாஞ் சாகுவானரக்கனங்கே ஏ
நான்முகன்கணைபினோடு நாகபாசந்தொட்டாலும்

வானவருந் தானவரும் வந்தவரை யெதிர்த்தாலும் ஏ
அண்டபிண்டநவகண்ட மெண்டிசை நடுங்கச்செய்வார்
சண்டப்பிரசண்டருங்கலி தொண்டராந்தபாதரும் ஏ

வசனம்.

சுவாமி தாங்கள் மயங்கவேண்டாம் அந்த இந்திரஜித்து விட்ட நாகபாசம் என்னைகட்டுமேயன்றி தங்கள் தம்பியாகியுந் தொண்டராயுமுள்ள பாதரிடத்தில் அணுகாது இது சத்தியம் விசனத்தை மாற்றுவீர் அண்ணா.

இராமர் - தரு - அ - தாளம் - காம்போதி - இராகம்.

அனுமானே

அயோத்திநகர் செல உபாய மொன்றுசொல அ
அங்குசீக்கிரம் தங்கவேண்டும் நாம்
பங்கமவருமுனல் பாவியாக்கனல் அ
ஏதுசெய்தாமோ எந்தன் நகரிலே
மாதாவாடவும மைந்தாவோடவும அ
இந்த காலத்தில் தந்திரஞ்சொல்வாய்
அந்தரஞ்செல யிந்திரஜாலமாய் அ

வசனம்.

அப்பா எனது கண்மணியாகிய ஆஞ்சநேயா இப்பொழுதே அயோத்தி செல்லவேண்டிய வுபாயஞ்சொல்லுவாயப்பா அனுமந்தா.

ஆஞ்சநேயர் தரு - ஆதி - தாளம்.

அஞ்சாதீர் அஞ்சாதீர் அயோத்திநகர் செல்வேன யான்
ஆரியனே வும்முடனே வாரிபிக் குங்கை யெல்லாம் அ
சேருவேன சேருவேன் சீக்கிரமாய் கொண்டிதோ
சேனைபரி வாரமோடு தேவதேவ தேவனே அ

அனுமார் வசனம்.

சுவாமி அதற்காக தாங்களஞ்சவேண்டாம் என் தோளின் மேலமருவீர் இதோவொரு க்ஷணத்தில் கொண்டுபோய் சேர்க்கிறேன்.

ராமர் வசனம்.

ஆனல் அப்படியே அமருகிறேன் வருவாயப்பா ஆஞ்சநேயா.

விபீஷ்ணர் தரு - ஆதி - தாளம்.

பொறும் பொறும் பூமியை யாண்டிடுஞ்சாமியே நேமியே
பூவையரை வெட்டுவானே பொன்னுட்டாரைக்கட்டுவானே
பொழியும்நெருப்பல்லவோ அழிவானவனல்லவோ பொ
சத்தியம் நிலைக்காதோகாண் சாஸ்திரமும்பொய்க்குமோதான்
ஜானகி வாழிடம் நானே தெரிகிறேன் பொ

வசனம்.

சுவாமி என் தாயாகிய சீதையை அப்பாவி தீண்டுவானுகில் நீராய் எரிந்து விழுவான் ஆகையால் நமது பிராட்டியை அவன் கொன்றவனல்ல. இதோ நான் பிராட்டியார் வாழுமிடஞ்சென்று எல்லா விஷயங்களையுமரிந்து வருகிறேன் அதுவரையிலபொருப் பீர் சுவாமி.

ராமர் வசனம்.

ஆனுல் அப்படியே சென்று வருவாயப்பா விபீஷணு

விபீஷணர் நாமாவளி.

ராம ராமஜெய ராஜாராம்
ராம ராமஜெய சீதாராம் ரா
தாமதமின்றி செல்லுவேனுன்
தாய் சீதையைக் கண்டுகொள்வேன் ரா
வான்வழியாகவே நான் சென்று
வண்டுருவாகவே வணங்கின்று ரா

சீதை பிராப்தம் விருத்தம்.

ஜனகன்செய்யாகசாலை தரணியில் வந்துதித்து
மனமதுகளித்தயோத்தி மன்னன் ராமனை மணந்து
வனமதில்சென்று முனிவர் வானவர்க்கபயந்தந்து
சினமுடனிலங்கை நின்ற சீதையாளரங்கில்வந்தேன்.

தரு.

சரவண பவ குக என்ற மெட்டு.

ஜானகி வந்தனஞ் சபைதனில் தந்தேனே ஜா
வானவர்வேண்ட வந்தவதரித்தாண்ட
தானவசமமா சாமியின் தேவியாள் ஜா
சந்திரமுகபிம்ப தையலராலுகந்த
சாதுதிரிச்சடை தன்னுடனேவா ஜா

கருங்குழல்விரிந்தாட கமலமுகஞ்சோர
காகுத்தனையுன்னி கடவுளடி பண்ணி ஜா

வசனம்.

அ ஆ கடவுளே நான் இப்பாவியாகிப ராவணனால் சிறை படவும் என்னுயகர் இந்த ராக்ஷதருடன் சண்டையிட்டு வருந்தவும் எழுபது வெள்ளம் வானர சைன்யங்களும் சுகத்தை துரக்கவும் வந்த வினையாதாயிருக்கலாம்.

சீதை - தரு.

## ஆண்டவன் என்ற மெட்டு.

அம்மா திரிச்சடையே என்னுண்டவன்வரவில்லையே
சும்மாயிருக்கின்றாரோ சூதுக்குள்ளானாரோதான் அ
எந்தன்சிறைமீட்கவென்று எழுபதுவெள்ளத்தோடன்று
வந்தவர்வரவில்லைய வையகத்தில்நான்பாவியே அ
மாயாவியெந்தனலே மன்னன்துயர்கொண்டதாலே
பூபாலர்நகைப்பாரேதான் பூவையரேயென்னசெய்வேன் அ
தைரிய முரைப்பாயம்மா சங்கடமோதீராயின்னாள்
வைரியரக்கரெல்லாம் மாளுவாரோ இனிசொல்வாய் ()

வசனம்.

அம்மா எனதன்புக்கிசைந்த சகியாகிய திருச்சடையே நேற்றயதினம் இந்திரஜித்தால் மடிந்த சேனைகள் யாவும் அனுமான் கொண்டுவந்த சஞ்சீவியால் வுயிர்பெற்றதாய் சாற்றினீர் இனி இவ்வருத்தங்களை நாம் படமுடியாதென்று என்னை வெருத்து என்னுயகர் அயோதிக்கு சென்று விடுவாரோ அல்லது என்சிறை மீட்பாரோ தெரிவிப்பாயம்மா.

திருச்சடை - தரு.

## முருகேசா என்ற மெட்டு.

பொருப்பீரே புகழ் பொததியிது
பூவையே அரக்க ராவியுண்டு வருவார் பொ
செருக்குடையானந்த யிந்திரஜித்து
சிரமோதகரையில் விழக்கண்டித்து
சிலைவலோர் வருவாருமைக்குறித்து
சிந்தைதனைந்துருகவேண்டா முமதுமனம பொ

வசனம்.

அம்மா தாங்களொன்றுக்கு மஞ்சவேண்டாம் இளையபெருமாளால் இன்றையதினம் இந்திரஜித்து மடிவான் நாளையப்போரில் இராவணனை வதைத்து தங்கள் சிறையை மீட்பார் அச்சமகற்றியிருப்பாயம்மா.

சீதை வசனம்.

ஆனால் இவ்விடத்திலமர்ந்து ராமநாமத்தை ஸ்மரிப்போம் வருவாயம்மா.

விபீஷணர் அசோகவனத்தைப் பார்த்தல் - நாமாவளி.

ராம ராமஜெய ராஜா ராம்
ராம ராமஜெய சீதாராம்
அசோகவனமதில் வந்தேனே என
தாரியன் தேவியை பார்ப்பேனே ரா

விபீஷணர் வசனம்.

அ ஆ நாம் ரகுநாயகரிடத்தில் பிராட்டியாரைப்பார்த்து வருவதாக வாக்களித்து நமது உருவத்தைமாற்றி வண்டுருவெடுத்துக்கொண்டு இந்த அசோகவனத்தில் வந்து சேர்ந்தோம் இனி நமது தாயார் இருக்குமிடத்தை பார்ப்போம்.

விபீஷணர் - தரு.

ஆ என்ற மெட்டு.

ஆனந்த மானந்த மானந்தமே பர மானந்த மானந்தமே
அன்னையதுதரிசனமே பண்ணும் பாபவிமோசனமே

ஆரிய ராமன் கோரியமாது
தேரியென்மகளால் பாரிலிருக்கிறுள் ஆ
இந்திராஜித்தவனாலே ஏதோமோசம் வந்ததாலே
ஏகுவேனந்த காகுத்தனிடம்
சோகத்தை மாற்ற வேகமாயிதோ ஆ

விபீஷணர் வசனம்.

அ ஆ இந்திரஜித்தால் ஏதோ மோசம்நடந்திருக்கிறது அவ் விடத்தில் வருத்தமடைந்திருக்கும் ராமருக்கு பிராட்டியிருப் பதை வுடனே சொல்வதுடன் இந்திரஜித்தின் மோசத்தையும் சொல்லுவேன்.

விபீஷணர் நாமாவளி.

தரு.

கண்டுக்கொண்டேனே காகுத்தனே நான்
கார்குழலாளன்னே காவினிலிருக்க க
கொண்டவா சிரத்தே கூப்பியிருகரம்
விண்டொருதாரகம் விளங்கிட சீரகம் க
தொண்டெனதுமகள் தோத்திரங்கள்செய்ய
துரையே ரகுராமா சோகமற்றுய்ய க
அரக்கன் மோசமெண்ணி அரன்வாழ்கயிலை நண்ணி
அடைந்துயாகம்பண்ணி அழிக்க நமைமண்ணில் க

விபீஷணர் வசனம்.

சுவாமி பிராட்டிக்கு என் மகள் தொண்டுசெய்ய அசோக வனத்தில் யாதொரு குறைவுமின்றி தங்கள் தநாமத்தை ஸ்மரித் துக்கொண்டு இருக்கிறுர் அந்தப்பாவியாகிய இந்திரஜித்து கயி லைக்குச்சென்று அங்குள்ள நிகும்பலையென்னும் காளியாகத்ஸத முடித்து வருவான் அந்தயாகம் முடிவதற்குமுன் நாங்கள் சென்று அந்தயாகத்தை அழித்து வருகிறேம் விடையளிப்பீர் சுவாமி.

ராமர் - தரு.

செந்தாமரைமலர் பாதா என்ற மெட்டு.

எந்தனுருயிர்தோழா என்னாளும் நீவாழ்வாய்
சிந்தாகுலந்தீர்த்த செம்மலேஎனேகார்த்த எ
சொந்த பந்துவைப்போலே வந்த அனுமனாலே
உந்தன் துணையினாலே ஒருகுறையினிமேலே

உளதோமரைபுகல் தரையிலினியகல்
யிளையவனுனை துணைபிடித்திட
ஏது செய்வதோ வோதுவாயப்பா
பாதகன் செய்த தீதுயேகிட ஏ

வசனம்.

அப்பா விபீஷணா உன்னை துணைக்கொண்ட எங்களுக்கு ஒரு குறைவுமில்லை இனி அந்த பாதகன் செய்யும் யாகத்தை யழிக்க தந்திரஞ் சொல்லுவாயப்பா.

விபீஷணர் விருத்தம்.

செந்திருமகளின் சேயா திருடணுமிந்திரஜித்து
அந்தவோர் யாகந்தன்னை யங்கனம் முடிப்பதாமேல்
இங்ஙனம் மடிந்தசேனை யாவரும் பிழைப்பதோடு
சொந்தமாஞ் ஜெயமவற்கே சொல்லுவீர் சென்றழிக்க.

வசனம்.

சுவாமி அந்த யாகத்தை அவன் முடிப்பானாகில் இறந்த சேனைகளெல்லாம் வுயிர்பெற்று எழுந்து வருவதுடன் அழி யாதரதமும் அராத நாணியுமுள்ள வில்லும் வொழியாத அம்புராத்தூணியும் பெருவான் பிறகு அவனை ஜெயிக்க நம்மா லாகாது இளையவருடன் நாங்கள் யாவரும்சென்று அந்த யாகத் தை அழித்து வருகிறோம் சீக்கிரம் விடையளிப்பீர் சுவாமி.

ராமர் வசனம்.

ஆனால் அப்படியே அனுப்புகிறேன்; சென்று வருவீர்க ளப்பா.

ராமர் தரு - தாள அடதாளம் - இராகம் நாட்டை குறிஞ்சி.

வருவாயே தம்பிலக்ஷ்மணா முன்னால் வருவாயே
வருவாயெனது சொல் பெருவாய் முனையில் நில் வ

அரக்கனுன்மேலே அயனஸ்திரம்விட்டாலே
அழிப்பாய் பிரம்மன் கணையினாலதை
பழிக்க அவன்மேல் விடுக்காதே அதை வ

எக்கணை தொடுவானோ அக்கணை விடுவோனே
எதிர்த்த அவனுடன் மதித்து போர் செய்வாய்
பதுமநிதியாளர் பதைத்து வோடுவாய் வ

ராமர் வசனம்.

தம்பி லக்ஷ்மணா அரக்கன் விடும் பிரம்மாஸ்திரம் முதலாகிய தெய்வபடைகளுக்குத்தக்க படைகளையேவி அந்த அஸ்திரங்களை அழிப்பாய் அவன்மேல் தெய்வப்படைகளை ஏவாமல போர்செய்து அன்னவன் சிறத்தை கண்டித்து வருவாயப்பா தம்பி லட்சுமணா.

லக்ஷ்மணர் தரு - ஆதி - தாளம் - நாட்டை இராகம்.

அண்ணா விடைதருவீர் அண்ணா
அரக்கன்வாழிடஞ்சென்று ஆக்கினைப்படிவென்று
துரக்க அவனுயிரை பரக்கவே செய்கின்றேன் அ

வசனம்.

அண்ணா தங்களிஷ்டம்போல் நான் சென்று இந்திரஜித்துவின் சென்னியைக் கண்டித்து வருகின்றேன் விடையளிப்பாய் அண்ணா.

ராமர் - தரு.

சரவணபவகுக என்ற மெட்டு.

தபனன் குலதிலக சாமியே கேளாய்
சாமியே கேளாய் தனுசிதையாளாய் த
அகத்தியாயோகத்தில், அயனிடயாகத்தில்
அவர்பெற்றதிதுவரி அன்பனே நீ குரி த
அம்புராத்தூணி அய்யனே கொள் நீ
அரக்கனே வென்றிட அமர்க்களஞ் சென்றிட த
மாருதிமுதலாய் வானர வீரரை
வல்லவா துணையாக வாழி நீ யழைத்தேகு த

வசனம்.

தம்பி லட்சுமணா இந்தவில்லானது அகத்தியர் பிரம்மாவிடம் பெற்று எனக்கு! தந்தார் இதோ இந்த அம்புராத்தூணியை

யுக் தரித்துக்கொள் உனக்குப்படைத்துணையாக அனுமார் சுக்ரீபன் விபீஷணர் அங்கதன் ஜாம்புவந்தர் முதலாகிய வீரரையனுப்புகின்றேன் இதோ இந்த வில்லேயுந் தருகின்றேன் சீக்கிரமாய் இந்திரஜித்தின் யாகத்தையழித்து அன்னவன் சிறத்தைக் கொண்டுவருவாயப்பா தம்பி லட்சுமணா.

லக்ஷ்மணர் - தரு,

போற்றிசெய்தேன் ஐங்கரனே என்ற மெட்டு.

போற்றி செய்தேன் அண்ணாவுன் செம்பொற்றாள்
அனுதினமெண்ணி போ
கற்றவர் போற்றிடுங் கதிரோன் குலமணியே
நல்லகனியே வல்லமுனியே மாமலர்பதமே போ

லக்ஷ்மணர் வசனம்.

அண்ணா நான் தங்கள் தாமரைபாதத்திற்கு சருணம்இதோ சென்று வருகின்றேனண்ணா.

வானர சைன்னியங்கள் வசனம்.

சுவாமி வந்தனம் நாங்கள் சென்று இந்திரஜித்தின் யாகத்தையழித்துவருகின்றோம் சுவாமி.

ராமர் வசனம்.

அப்பா விபீஷணா நமது வானரசைன்யங்களுக்கு யாதொரு ஆபத்தும வராமலும் அவன் செய்யும் மாயப்போரை லக்ஷ்மணனுக்குச் சொல்லியும் ஜாக்கிரதையாய்யுத்தஞ்செய்து அன்னவனே ஜெயித்து வருவாயப்பா விபீஷணா.

விபீஷணர் வசனம்.

சருணஞ் சுவாமி அப்படியே சென்று வருகின்றேன்.

இந்திராஜித்து வசனம்.

அ ஆ நாம் அனுமாரென்னுங் குரங்கின் முன்னால் மாயையால் சீதைப்போலுருவாக்கி அன்னவளேவெட்டி அயோத்தியில் சென்று அங்குள்ளவரையெல்லாம் நாசஞ்செய்வேனென்று ஓர் வித போக்குக்காட்டிகைலாயத்தின் வடபாகத்திலுள்ள நிகும்பலாதேவியின் ஆலயத்தை வந்து சேர்ந்தேன் இனி சீக்கிறமாக நமது யாகத்துக்கு ஆரம்பிப்போம்.

இ-து பன்னிரு சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அஞ்செழுத்துருவான பஞ்சாட்சரத்திலு
மஷ்டாக்ஷரந்தன்னிலு
மாறக்ஷத்துரு சடாக்ஷரந்தன்னி
மகரமெனு மக்ஷரத்துங்
கஞ்சமலர்வாசனுங் காணுதப்பிரணவக்
கருவினின்ருடுபவனுங்
கருதரியமாலயனுங் காணுத மெய்ப்பொருளுங்
கலையலைமகளிருவருந்
தஞ்சமென கைகூப்பி யஞ்சலியுடன் நிற்குந்
தாயெனுமாதிசத்தி
தாரணியிலுன்னைவிட வேரொருவரில்லையே
சத்துசித்தானவுமையே
சஞ்சிதக்கன்மமதில் துஞ்சிட்டசேனையது
தானே பிழைக்கவருள்வாய்
தாங்குபுகழ் வாங்கூரிலோங்கி வளர் செல்வியே
தாரணியில் யான் வாழவே.

இந்திரஜித்து - தரு.

தசரததனையா என்ற மெட்டு.

திரிபுரசுந்தரி சிங்கவாகனிமாரி
த்ரியம்பகிகௌரி திங்கள் சடையன்பாரி தி

தாருகவைரி சாமுண்டி திரிசூலி
காரணிநீலி காளிமாயாளியூர்தி தி

செங்கையுந் திங்களும் பொங்கரவுந் தங்குசிவன்
பங்கிலுரை பார்வதி
மங்கள கல்யாணகுண மாதங்கி திரிசூலிப்ரம்மகபாலி
சண்டகமுண்ட சம்மாரி
மகிடசம்மாரி மைந்தனையாதரி
ஜெகமிசையாகம் செய்கிறேன் யோகம்
சிங்காரவேலன் செந்தமிழைப் பாலள்
பங்கமிலாமலே பாடியே தேடினேன் தி

காளி துதி வசனம்.

ஆலகாலமுண்ட காளி
கோலகாலமகிட சம்மாரி
சூலமும் வேலும்கொண்ட நீலி
மாலின் சிரமாலையணி கபாலி
வாலையெனும்பெயர் பூண்ட சூரி
வைரியாகிய தாருக சம்மாரி
பைரவி பார்வதி என்னுங்கௌரி
முப்புரமெரித்தமாரி
மூவர்க்கு முதலான வல்லி
சிவனுடன் வாதாடிய செல்வி
சிங்கவாகனமேருஞ் சண்டி
சீக்கிறமென்முன் வந்தருள் தருவாய் திரிபுரசுந்தரி

லக்ஷ்மணர் தரு.

வாரும்வானரவீரரே வஞ்சகன் வாழிடந்தீரரே
கோருமவனிடயாகத்தை கூடியழிப்போம்யோகத்தை
கோதிலா கோதிலா மாதவம்புரி விபீஷணா வா
கொஞ்சமு மஞ்சிடப்போரீர்கள்
கோலத்தைக்காணவாரீர்கள்
கோரினேன் கோரினேன் மாருதிவழி காட்டுவாய்

கஜல்

கோரையாந்தந்தத்தோடு கூந்தலோ செம்பட்டய் மேவ
குரங்கெனமதிக்காதந்த கொடும்பாவி தனைக்கொல்ல
கொண்டேன் பெரும்படைபாருங்கள்
கோபித்தெழுந்து வாருங்கள்
கோடியாங் கோடியாங் கைலையாமிதை நாடுங்கள் வா

வசனம்.

அப்பா எங்களுயிர் துணைவராகிய நேசர்களே நாமோ கயிலாயமலையின் வடகோடியை வந்தடைந்தோம் அந்தப்பாவியாகிய இந்திரஜித்து எந்தயிடத்தில் யாகஞ் செய்கின்றான் பார்ப்பீர்களப்பா தோழர்களே.

சுக்ரீபன் - தரு.

அதட்டுகின்றவள்யாரடி என்ற மெட்டு.

அ ஆ யாகஞ் செய்குரான் அந்தயிந்திரஜித்துப்பார்
ஓ ஓ இராக்கதவெள்ளத்தை உள்ளே காவல்வைத்தான்பார்
ஓடிக்காவல்நீக்குவோம் வொழியசேனையைதாக்குவோம்
உத்தமரேபத்தியோடு சித்தியாகவுற்றிடுவீர் அ

அந்தரமவரைசொர்த்திட அணிவகுப்பீர்கார்த்திட
ஆரணமீதுநடிக்கும் அய்யன்பாதந்துதித்து
அஞ்சாதீர் மிஞ்சுவீர் அரக்கரெல்லாம் துஞ்சிடவே அ

வசனம்.

சுவாமி இராமானுஜரே அதோ பார்க்கடலின் மத்தியில் விஷ்ணு சயனித்திருப்பதுபோல் இராக்கதர்கடலின் மத்தியில் இந்திரஜித்து யாகத்தை செய்துக் கொண்டிருக்கிறுன் பாரும் சுவாமி.

விபீஷணர் தரு-ரூபக தாளம்.

ஏனின்னந் தாமதஞ் சுவாமி

எடுப்பீர் தனுசை விடுப்பீரவர்மேல்
துடித்து சேனை கொடிக்குளழிய ஏ

படியிற்சேனை    பார்க்கடலைப்போல்
விடுத்துகாவல்    பிடித்தான் யாகம்
முடித்தாக்கரை    குடித்தவருயிர்
மூரையோவென தரைமீதிலே விரைவாகவேதுரையேசெயும் எ

விபீஷணர் வசனம்.

சுவாமி இளையபெருமாளே நீர் இனிதாமதிப்பீராகில் அவன் யாகம் முடிந்துவிடும் அதி சீக்கிரமாக அவனைசுற்றியிருக்கும் படையை யழித்து யாகத்தை பின்னப்படுத்துவீர் சுவாமி.

இலக்ஷமணர் - தரு.

## சாடாசையாசோமே என்ற மெட்டு.

சூராழிந்திட தொடுப்பேன் கணையை    விடுப்பேன் மாரியை
துரிதமாய்வருவீர்    பெரும்படை வீரரே    சூ
தாரணிதனிலே மதியாதானவர்    சிரமதை சிலையால்
தாக்கினேன் விழுந்திட    பார்க்குளே மடிந்திட
நோக்குவீர் நொடிக்குளே    நீக்குவேன் படிக்குளே    சூ
இந்திரஜித்தின் காவலையழித்தேன்    ஆவலை முடித்தேன்
இணையிலாயாகமழித்து    நான் வருவேன்
மந்திகளே இனிமேலே வருவீர்    மயக்கத்தாலே
வருந்தாதீரினி    திரும்பாதீர் தனி
விரும்பாதீர்பயம்    தரும்பாகுமிவன்    சூ

வசனம்.

அப்பா வானர வீரர்களே இந்திரஜித்தை சூழ்ந்திருந்த சேனைகளையும் அன்னவன்யாகத்தையும்நாம் அழித்துவிட்டோம் இனி அவன் மயாவினோதமாகிய யுத்தம் புரிவான் அதைக் கண்டு

நீங்கள் பயமடையப்போரீர் ஜாக்கிறதை விபீஷணு நீ என்னருகி லிருந்து இவன் செய்யும்போரின் மாயங்களை சொல்லுவாயப்பா.

இந்திரஜித்து விருத்தம்.

சேனையை யழித்ததோடு திக்பிரமை நமக்குச் செய்து
வானரசேனையெல்லாம் வந்துமே நம்மை சுற்ற
மானிடன் க்ஷணத்தில்செய்த மகிமையை யென்னசொல்வேன்
வானவர் நகைக்கக்காலம் வந்ததே என்னசெய்வேன்

வசனம்.

அ ஆ இதென்ன ஆச்சர்யம் நமது சேனையெல்லாம் ஒரு க்ஷணத்தில் மடிந்ததோடு வானரவீரர்கள் மலைமரங்களைப் பிடுங்கி நம்மீது எரிகின்றனர் நாம் செய்துக்கொண்டிருந்த யாக மந்திரம் தவறிவிட்டது இனி நாம் என்ன செய்வது ஜெகதீசா.

அனுமார் வசனம்.

சுவாமி இளையபெருமாளே இதோ நான் அந்த பாவியை கொன்று வருகின்றேன் பாரும்.

இந்திரஜித்து - அனுமார் தர்க்கம்

போ போ உனக்கு மதியா என்ற மெட்டு.

அ ஆ அயோத்தி செல்வேனென்று என்னிடங்க சொல்லி
அந்தா புஷ்பகமேரி நின்றாய்
அடுத்தடுத்துரைத்தேன் தடிப்பயலேவுனை
துடித்திடவைத்தெனை சோரத்தனமாய் வந்தாய் அ

இந்திரஜித்து - தரு

போ போ புன்மொழி சொன்னாய் குரங்கேவுனக்கே வாய்த்த
புத்தியை யொழித்தாய் இந்த அரங்கே
புவியிலுனையேமாற்றி பூவையரைமாய்த்து
தவத்திலிருக்கவந்தேன் சார்ந்தவர்களை கொன்றேன போ

அனுமான் - தரு.

சீ சீ சீதையைக் கோல்லப்போமா சினத்தாலுன்னை
ஜெயித்தால் மருத்திடவுமாமா
ஜெகத்துக்கெல்லாமன்னை சுகத்தைக்கொடுக்குங்கண்ணை
இகத்திலரிவாரோ தகிப்பேனுனையரிவாய் சீ

இந்திரஜித்துக்கும் - அனுமாருக்கும் வேறு தர்க்கம்.

இந்திரஜித்து - தரு.

நில்லடா நில்லடா குரங்கே நிமிஷத்திலுனைகொல்லுவேன்
புல்லாந்தமனிதரை போக்குவேனுயிரினிதரை
பூதலமீதில் வேதனொடாதி
நாதன் துணையாய் போதனை செய்தாலும் நி

அனுமார் - தரு

ஓடாதே ஓடாதே பாரடா உதைத்தேனுந்தனைசேரடா
ஊனதை நாய்நரி தின்றிட வோங்கினே னுன்னுயிர்சென்றிட
ஓதரிய யெந்தன்னுதனிடதேவி சீதையாள் சிறைபாதகா தீர ஓ

இந்திரஜித்து - தரு.

சிறையொழித்திடலாகுமா தேவரும் செல்லப்போகுமா
சேர்த்திதோ வுங்களைகொன்று நான் தேவரரிய அந்தமான்
தேவியாய் செய்வேன் தந்தைக்கு
ஆவியை காவினிலின்று தாவியுனைக்கொன்று சி

அனுமார் - தரு.

கொல்லவுந்தனுலாகுமா கூவியுரைக்கப்போகுமா
வில்லாளரிருவரொன்றறி வேதந்தொழுமவர்பாதங்குறி
வேதியனனைமாதாவாக நினை பாதகாயின்னும்வேதனைவரும் கொ

இந்திரஜித்து - தரு.

வில்லாளரென்று போற்றினாய் வென்றதறியாயோ சீற்றமாய்
கொல்லுவேனந்தயிருவரை குரங்கினத்தோடு வருவாரை
கோதிலா என்னால் வேதனைப்பட்டதை
ஏதடா மறந்து வாதுகள் பேசுராய் வி

அனுமார் - தரு.

வாதுசெய்யவோ கோரினாய் மகத்தை நடத்த மீறினாய்
சூதுசெய்து நீ வந்தாயோ சூரங்கெட்டு நீ நொந்தாயோ
சோகமூரவுந்தனாகமதைக்கண்டு வாகையணிவேன்தாகமாயிதோ

இந்திரஜித்து வசனம்.

அ ஆ அடா குரங்கே இதோ வீரக்கவசந் தோளிலிட்டு தேர்மீதேறினேன் இப்பொழுது இவ்விடத்தில் வந்திருக்கும் வானரப்படைகளையும் அச்சிறுமனிதர்களாகிய யிருவரையும் கொன்று ஜெயபேரி முழக்குகின்றேன் பாரடா குரங்கே.

இருவருக்குந் தர்க்கம் - ஆதி - துருசு.

அனுமார் - தரு.

அரிவேனரிவேனுன்வீரம் அங்கே கொஞ்சம் நில் நில் நில்

இந்திரஜித்து - தரு.

தெரிவேனுந்தனை குரங்கென்று சீ சீ அப்புரம்செல் செல் செல்

அனுமார் - தரு.

வரையிதை யெரிந்தேன் நீமோள வஞ்சகனே இனிபோ போ போ

இந்திரஜித்து - தரு.

கல்லாலெந்தனைவெல்லுவயோ சசடா பொடிபட பார் பார் பார்

இந்திரஜித்து வசனம்.

அடா குரங்கே நீ யெரிந்த மலையானது பொடிப் பொடியாக விழும்படி செய்தேன் இனி யென்கைபாணத்தால் உன்னை சித்திரவதை செய்குரேன் பாரடா குரங்கே.

இந்திரஜித்து - தரு.

தொடுத்தேன்பார் சித்ரக்கணை வுந்தன்
தோளிலும் மார்பிலுந் துளையுடனுரிவிட தொ
வடிக்கணையிதினால் வானரர் முடிந்திட
படிதனில் மானிடச் சிருவரும்மடிந்திட
ஆரினியெதிர்ப்பவர் பாரினில் மருப்பவர்
வாரிகுரங்கே வைகுந்தம் நாடிட தொ

அனுமார் வசனம்.

அ ஆ இதென்ன ஆச்சர்யம் இப்பாவியரக்கன் விடுங்கணையால் நமது திரேகமெல்லாம் இரத்தப் பிரவாகமாகின்றதுமன்றி கைகால்கள் சோர்ந்து ஆயாச முருகின்றது இனியென்ன செய்யப்போகிறேன் ராமப்பிரபு.

சுக்ரீபன் வசனம்.

அ ஆ இதென்ன ஆச்சரியம் ஆஞ்சநேயர் இந்திரஜித்தின் பாணத்துக்காற்ருதவராய் சோர்ந்து விழுந்துவிட்டார்நாம் இனி சும்மாயிருப்பதில் பிரயோசனமில்லை குழந்தாய் அங்கதா ஜாம்பு வந்தரே வருவீர் ஆஞ்சநேயருக்குத் துணையாகச் செல்லுவோம்.

இந்திரஜித்து சுக்ரீபன் தர்க்கம் - தரு - ஆதி - தாளம்.

கள்ளப்பயலே வள்ளல் வருவார் மெள்ள நீ யோடாதே

இந்திரஜித்து - தரு.

சள்ளையொழிப்பேன் சல்தியாய்வருவீர் குள்ளக் குரங்கினமே

சுக்ரீபன் - தரு.

சள்ளையொழித்திடவல்லவனோஉயிர்கொள்ளைகொள்ளுவனேபார்

இந்திரஜித்து - தரு.

மந்திகளே வுங்கள்மன்னனை காட்டுவீர்மல்லுநான்செய்திடவே

சுக்ரீபன் - தரு.

தந்திரமரிவேனிந்திரஜித்தே தங்குவாயங்கனமே

இந்திரஜித்து - தரு.

தங்கவோ வுங்களை பங்கப்படுத்த தாக்கினேன் சரத்தைப் பார்

சுக்ரீபன் வசனம்.

அ ஆ இவன் சரவேகத்திற்கு நாம் தாங்கமாட்டோம் நமது திரேகமோ சோர்ந்துவிட்டது இனி நாம் இவனை தடுப்பதற்கு முடியாது ஆனதாலிவ்விடத்தில் சற்றுநேரமமர்ந்து நமது யிளைப் பாற்றிக்கொள்வோம் வருவீர்களப்பா.

வானர வீரர் வசனம்.

அப்படியே செய்வீர் அரசே.

விபீஷணர் விருத்தம்.

அய்யனே அரக்கன் வேள்வி அழிந்தது அழிந்ததங்கே
செய்யவே போரைவேண்டி சேனையை யழித்துவாரான்
கையினில் தனுசையேந்திக் கடையன்மேலம்பைவிட்டு
வையவே வதைக்கவேண்டும் நருமலர் சேருந்தோளா.

வசனம்.

சுவாமிஇந்திரஜித்துவின் நிகும்பலையாகம் ஆஞ்சநேயரால் அழிந்தது, அவன் ரதமேறி நமது சேனைகளை சின்னப்பின்னப் படுத்தி வுங்கள் மீது சண்டைக்கு வருகின்றான் சீக்கிரம் பாணப் பிரயோகஞ்செய்து அன்னவனை வதைப்பீர் சுவாமி.

மானைப்பிடித்து என்றமெட்டு.

ஆஞ்சநேயர் - தரு.

தோளின்மேலமருமே துரையே ராமானுஜா தோ
தோளின்மேலமருமே துஷ்டனைக் கொன்றிட
காளியின்யாகங்கெட்ட கசடனுயிர் நீங்க தோ
தாமரைபாதத்தை தாங்குவேனிருகாம்
சோமனை நிகர்த்த சுந்திரவடிவழகா தோ

அனுமார் வசனம்.

சுவாமி அந்தப்பாவியாகிய அரக்கன் ரதாரூடனாய் வருவதால் தாங்கள் பாதசாரியாய் போவது தகாது ஆதலால் என் தோள்மேலமர்ந்து அமர்புரிவீர் இளையபெருமாளே.

## துடிக்கும் என்ற மெட்டு.

லட்சுமணர் - தரு.

துடிக்க அவனை மடிக்க யேருவேன் தோளின்மீது
தூய ஆஞ்சநேயா சீருவேன் இணையிலாத
துணைவன் பாதந்தனை வணங்கி
முனையிற்சென்று கணைதொடுத்திட
தொட்டேன் தனுசை யஷ்டதிசையதிர துஞ்சிடவந்த
சூரானைவரும் பாரில் நின்று பதர

வசனம்.

அப்பா ஆஞ்சனேயா உன்னிஷ்டம்போல் உன்தோள்மேலமர்ந்தேன் அதோ வரும் அரக்கன்மீது செல்லுவாய் பார்ப்போம்.

அனுமார் வசனம்.

சுவாமி அவ்வண்ணமே இதோ செல்கின்றேன்.

## ஆ ஆ மொழி என்ற மெட்டு.

லட்சுமணர் - இந்திரஜித்து தர்க்கம்.

வாவா அரக்கர் குலவீரா உனைவதைக்கவே
வோடிவந்தேன் நேராய்
வாரிதிபோல் பரியாயிரம் பூட்டிய
தேரையழித்து வுந்தன் போரை யொழித்திட வா

இந்திரஜித்து - தரு.

அ ஆ மொழிந்ததென்னமூடா உனக்கறிவில்லையா குடிகேடா
அடவியில் வாழ் கவியானதை கூட்டி நீ
திடமுடனே நின்றாய் சேதிப்பேனுந்தனை அ

லட்சுமணர் - தரு.

போ போ அரிவேனுனை மடையா
உன்புன்மொழி காட்டவந்தாய் கடையா
போகவுலகிலுளார் சோகம்பெருவாருனல்
போகவுயிர்வதைக்கபோட்டேன் சரத்தைப்பாராய் போ

இந்திரஜித்து - தரு.

சீ சீ பகர்ந்ததென்ன சேயா உன்சிறியகணைதடுத்தேன்பேயா
சித்திரவிசித்ரகணைதேடி தொடுத்தேன் பாராய்
சீற்றமுடனேயிதை மாற்றவுன்னாலாமா சீ

லட்சுமணர் - தரு.

வதைப்பேன் வதைப்பேனென்ருய்
நீயேஉன் வாணுளழிவதரியாயே
வருகுஞ்சரத்தையெல்லாம் முறியவடித்தேன்பாராய்
பெருகக்குரிதிவெள்ளம் பிறைமுகக்கணைதொட்டேன் வ

இந்திரஜித்து - தரு.

அடடா அடடா இது விந்தை உன்பகழியழித்தேனதில் நிந்தை
அஞ்சிட தேவருந் துஞ்சிடவானரர்
மிஞ்சிட பகழியை மேனியில் விட்டேன்; பார் அ

லட்சுமணர் - தரு.

மதித்துவுன்னம்புகளை நானே இந்த மாருதியின்மேனின்றுதானே
வடிக்கணையாவதை யடித்துப் பொடிபடுத்தி
வஞ்சகனே வுயிர் வாங்க சரந்தொடுத்தேன் ம

இந்திரஜித்து - தரு.

வாங்குவேனுயிரை யென்ருய் யென்னை
இதோ வருகுது பிரம்மன் கணையுன்னை
வதைக்குது முனைத்தடுக்க வல்லமை யுள்ளதோ
பதைக்க தேவர்களொடு பாரினில் விழுந்திட வா

லட்சுமணர் - தரு.

உதையமரம் பெருத்தால் தூணுஉன் கணைபோகுதுபார் வீணுய்
சதுர்முகன் கணையது தானுய் விழுந்தது
கெதியுனக்குவேறு கிட்டுமோ வோடாதே நில் உ

இந்திரஜித்து விருத்தம்.

மனிதரில் வீரனென்று மதித்திட்டேனுன்னையிப்போ
தனிப்பெருங்கடலிலன்று சயனித்தோன் சக்ரந்தன்னை
துணித்திட உந்தன் சென்னி தூக்கினன் விட்டேனிப்போ
அனித்தியமுனாக்குத்தானே அறிந்திடு தூரப்பாய் பூமி.

வசனம்.

அடே லட்சுமணா உன் சிரத்தையறுத்து பூமியில்தள்ள திருமாலின் சக்ராயுதத்தைவிட்டேன் ஜாக்கிரதை.

லட்சுமணர் வசனம்.

அப்பா விபீஷணா அந்தப்பாவியாகிய இந்திரஜித்து நம்மை கொல்ல சக்ராயுதம் விட்டிருப்பதால் நாம் யாவரும் நிராயுத பாணிகளாய் ஸ்ரீமன்னாராயணனை ஸ்மரிப்போம் வருவீர்கள்.

லட்சுமணர் - தரு.

பூபாலர் மகிபூமான் என்ற மெட்டு.

பூபாரந்தீர்த்த பூமா பூபாதபன்னிரு நாமா
புல்லர்களாவினி யல்லலுறாதருள் பூ
பக்தர்களிருதயசோமா பாலகோபாலபரந்தாமா
நித்தியவிரதநற்சீமா நீலமேக நிரசாமா பூ

தொகையரா.

நேசமாய் பார்க்கடல் வாசமாய் கொண்டவா
நேர்த்தியாய்ப் பன்னகப் பாயலில் துன்றிட நின்றவா
நெஞ்சமதஞ்சலி செஞ்சரணமலர்
வஞ்சகரஞ்சிட தஞ்சந்தஞ்சமலர் பூ

இந்திரஜித்து வசனம்.

அடா லட்சுமணா நான் தவத்தினால் பெற்ற சக்ராயுதத்தையும் தந்திரத்தினால் பின்னிடச்செய்தாய் இதோ சகலலோக சம்மாரகர்த்தாவாகிய சிவபிரான் அஸ்திரந்தொடுக்கின்றேன் பார்.

விபீஷணர்—இந்திரஜித்து தர்க்கம்-ஆதி-திருசு.

இந்திரஜித்து - தரு.

பாசுபதக்கணையீசுரமாகவே வீசுகிறேனிதோபார்

லக்ஷ்மணர் - தரு.

பாசுபதக்கணை நாசமதாக பாரில் விழுந்திடப்பார்

121/43

இந்திரஜித்து - தரு.

ஈசனேவல்ல தாசனேயிவ     னென்னவென்று சொல்லுவேன்

வசனம.

அ ஆ நாம்விட்ட தெய்வப்படைகளை துண்டுதுண்டாகச் செய்கின்றான் இவனை மும்மூர்த்திகளில் ஒருவனாய் மதிப்பதா அல்லது சூரசம்மார கந்தவேளெனமதிப்பதா நான் இவனையா ரென்று சொல்லப்போகிறேன் ஜெகதீசா.

விபீஷணர் - தரு.

நேசனேயிவன்வாசவ     னவதாரபுருஷனடா

வசனம்.

அடா எனது கண்மணியாகிய ராவணீ இவர்வைகுந்தவாசனாகிய திருமாலின் சயன சேடனம்சமாய் வந்தவர் இவர்களை ஜெயிக்க உன்னாலாகாதடா கண்மணி.

இந்திரஜித்து - தரு.

வாசவனாகிலும் பாசக்கணையினால்     வாட்டுகிறேனிதோ பார்

வசனம்.

எத்தகைய தேவாாயினும் இதோ என் நாகபாசத்தினால் கொல்லுகிறேன் பார்.

விபீஷணர் - தரு.

மோசம்வருமடாதேசமிதையாள தாசனாகவருவாய்

வசனம்.

கண்மணி இளையபெருமாள் உன்னைக் கொல்லாமுன்னம் இந்ததேசத்தையாளுதற்கு உன்னையல்லால் முதன்மையுடையாரில்லாததால் இவர் பாதங்களில் விழுந்து தாசனாய் என்னைப் போலிருப்பாயப்பா புத்திரசிகாமணியே.

இந்திரஜித்து-விபீஷணர் தர்க்கம்-அடதாளம்-சாப்பு.

இந்திரஜித்து - தரு.

அடுக்காதே அரக்கர்குலமதை துரக்கவுமக்கு அடுக்காதே
அமரரேசுவார் தமரைதுரந்ததால்
சமர பூமியில் சதைப்பேன் பழிவரும் அ

வசனம்.

சிற்றப்பா நீர் சூரர்குலத்துக்குரிய வீரத்தையொழித்து அவர்களிடஞ்சேர்ந்ததுமல்லாமல் என்னையும் தாசனாக உரைத்தாய் இப்பொழுதேவுன் சிறத்தைகண்டிப்பேன் ஆனால் அப்பனைக்கொன்றானென்று உலகோர் பழிப்பார் அதற்காக அஞ்சுகின்றேன்.

விபீஷணர் - தரு.

படிக்காதே பற்பலமொழிகற்றவன்போல் படிக்காதே
பங்கமுற்றது லங்கையானது
சங்கையற்ற வுங்கள்தாதையால் ப

வசனம்.

அப்பா நீ எனக்கு நீதி சொல்லவேண்டாம் உன் தகப்பனுல் இலங்கையிலுள்ள அரக்காழிந்ததுமன்றி நமது மூன்னோர்களின் பெயரையும் பங்கப்படவைத்தான் நீ அவனுக்கு நீதி சொல்லு வாயப்பா.

இந்திரஜித்து - தரு.

முடிக்காதே மோசமனிதனை நேசித்து நீ முடிக்காதே
மொழியும் வாசவ னுலுமழிவிலா
பழியைதேட வழியுரைத்தனே மு

வசனம்.

அய்யா நீர் இம்மனிதனை நேசித்து என் தகப்பன் கீர்த்தி யை கெடுக்க முயலுவதை நிருத்துவாய்.

விபீஷணர் - தரு.

துடிக்காதே சோரத்தனமாய் சேர்ந்தனேயிங்கு துடிக்காதே
தொட்டசீதையால் பட்டபாடிது
விட்டுவிட்டால் நஷ்டமினியில்லை து

வசனம்.

அப்பா நீயோ திருட்டுத்தனமாய்வோடிவந்து யாகத்தை செய்தாய் உன்யாகமுமழிந்து உன் திரேகமோ சில்லி சில்லியாய் விட்டது இலங்கையிலுள்ள ராக்ஷதரோ வொழிந்தார் இவ்வித கஷ்டமெல்லாம் உன் தந்தையாகிய இராவணன் சீதையாகிய பிராட்டியை தொட்டதால் இவ்வித கஷ்டமுண்டாயிற்று இப் பொழுதாவது சீதையைவிட்டு சரணுகதியடைய போதிப்பா யப்பாஉன் தந்தையாகிய இராவணனுக்கு.

இந்திரஜித்து - தரு.

கெடுக்காதே கீழானமனிதர்க்கு தாழ்ந்துநின்று நீ கெடுக்காதே
கெங்கையணிந்தவன் தங்குரிதனே
அங்கைபாலன்று கொண்டவன்றனே கெடு

வசனம்.

அய்யா கைலங்கிரியை யெடுத்த என் தந்தையின் கீர்த்தி யை கெடுக்க தாங்கள் சொல்லாதீர் கவிர எங்கள் குடும்பத்தை அதமாக்கவும் எண்ணவேண்டாம் சித்தப்பா.

விபீஷணர் - தரு.

எடுக்காதே என்மேல் வீண்பழி யன்பினால்மொழி எடுக்காதே
எத்தனையோ புத்திமதிகளை
பற்றியுரைத்தேன் பழித்தாரெந்தனை எ

வசனம்.

அப்பா நான் எத்தனைவிதமாகவோ உன் தந்தைக்கு சொன்னேன் அவரோ என்னைபழித்தனுப்பினர் ஆதலால் என்மேல் ஏன் வீண்பழிசுமத்துகிறாயப்பா.

இந்திரஜித்து - தரு.

தடுக்காதே தாக்கியிக்கணை போக்குவேனுயிர் தடுக்காதே
சாற்றுவார் சித்தப்பனென்றனை
சீற்றமானதால் மாற்றுவேனதை த

வசனம்.

சித்தப்பா என்னை தடுக்கவேண்டாம் இதோ உலகபழிப்புக்கஞ்சாமல் உன் சிறத்தை யிப்பாணத்தால் கண்டிக்கிறேன்பார்.

லக்ஷ்மணர் - தரு.

விடுக்காதே விட்டவுன்கணை பட்டுவிழச்செய்தேன் விடுக்காதே
வேண்டிவந்த விபீஷணனுயிர்
ஈண்டுகார்த்திட நானிருக்கையில் வி

வசனம்.

அடா இராக்ஷதப்பயலே இதோ நீ விட்டபாணத்தை கண்டித்து விபீஷணருயிரை நான் கார்த்தேன் பாரடா துஷ்டா.

இந்திரஜித்து விருத்தம்.

அலைகடல் சூழுமிந்த அவனியையாண்டிருக்கும்
தலைவனைவெறுத்தசிறு தந்தைமேலம்பைவிட்டால்
விலக்கினாயிடையில்வந்து வீரமுமாமுமாயோ
துலங்குமிவ்வேலையேவி துலைக்கிறேனவன் சிரத்தை.

வசனம்.

அடா லட்சுமணா நான் என் சிறியதந்தையைக்கொல்ல பாணங்களை விட்டேன் நீயோதர்மந்தவறி இடையிற்புகுந்து அந்த அம்புகளைக் கண்டித்தனை இதோ இந்தவேலையேவி என் சிறிய தகப்பனுயிரை வாங்குகிறேன் பாரடா வீரமற்றவனே.

லட்சுமணர் விருத்தம்.

அடைக்கலம் புகுந்தபேரை யாதரித்திடவே வேண்டி
தடுத்ததேயல்லாலம்பை தர்மனுன் துரந்ததுண்டோ
விடுத்திட்டவுந்தன்வேலை விழுந்திடச்செய்தென் வேலால்
அடித்திடவுனையுங்கொன்று துரையவர் பாதம்பணிவேன்

வசனம்.

அடா துஷ்டா நானடைக்கலமென்றவரைக் கார்த்தேனன்றி தர்மத்தை மரக்கவில்லை இதோ நீ விடுத்த வேலையுந் தடுத்து உன்மீதும் வேலேவுகின்றேன் பாரடா துஷ்டா.

இந்திரஜித்து வசனம்.

இதோ நீ விட்டவேலை தடுத்து என் சிறிய தந்தையிடம் யுத்தம்புரிய செல்லுகிறேனடா மானிடா.

விபீஷணர் - தரு - ஆதி - அடாணு.

சீ சீ எனை யெதிர்க்க தகுமா
சித்தப்பனென்றுயெனை மெத்தப்புகழ்ந்துபேசி
புத்தியில்லாமலுயிர் போக்குவேனென்றுரைத்தாய் சீ

இத்தரிணி மாந்தரெல்லாஞ் செத்தானிந்திரஜித்து
விட்டோம் பயமதனையென்று
இமையவராதியாக நின்று
எக்களிப்புட னுடயின்று
எத்துகிறேன் சாரதி குதிரை முதல் ரதமொடு
இந்திரன் பகை யொழிக்க வுந்தனுயிரையுங்கொன்று சீ

மண்டியிட்டு தண்டெடுத்து புண்டரீகன் சாட்சியாக
மாட்டுகிறே நிதோபாராய்
மாதவத்தால் பெற்றவரம்வேராய்
மயங்குதடா இலங்கை சேராய்
மனிதர் மனிதர் என்று தினையளவாய் மதித்தாய்
தனிப்பெரும் பரஞ்சுட ரென்றவரை நின்றுகூறாய் சீ

வசனம்.

அடா பயலே என்னை மரியாதைதவரி பேசினதால் என் தெண்டாயுதத்தால் உன் தேர்சாரதி குதிரையை யழித்து உன்னை பாதசாரியாக்கினேன் பாரடா பயலே.

இந்திரஜித்து - தரு.

மானைப்பிடித்து என்ற மெட்டு.

அய்யனே கண்பாரும் மெய்யனே
எனக்காரினி யருள் பாரினிரரயுதனுயினேன்
பைபரவங்களெழுந்தாடுஞ் செஞ்சடை
பதியில் மதியும் நதியுஞ்சூடும்
மங்கைபங்கா யிங்குவந்து அ
அண்டரானோர் தொண்டராக
கொண்டுசிறை கண்டுவாழ்ந்தேன்
குலத்திலுதித்த அப்பனென்னை
நிலத்தில் நிற்க வைத்ததாலே அ
குரங்கின்சேனை யுரங்கொண்டென்னை
புரங்கண்டதாலிரங்கி நொந்தேன்
புரத்தை யெரித்த அரனோரதத்தை
புரவியோடு பொடிபடுத்தினார் அ

வசனம்.

அ ஆ ஜெகதீசா எனது யாகத்தையும் இலங்கையையும் அழிக்க இந்தப்பாவியாகிய என் சித்தப்பனே உளவாயிருக்கின்றான் தவிர நமது இரதம் முதலானதும் அழிந்துவிட்டதால் இனி இங்கிருப்பதில் ப்ரயோசனமில்லை இவர்களரியாமல் இலங்கையை நோக்கிச்செல்லுவேன்.

லட்சுமணர் வசனம்.

அ ஆ விபீஷணா இதென்ன ஆச்சரியம் இவ்விடத்திலிருந்த இந்திரஜித்து திடீரென்று மறைந்திருக்கிறான் இனியாது செய்வானோ தெரியவில்லை விபீஷணா.

விபீஷணர் வசனம்.

சுவாமி தாங்கள் அவதைரியப்படாதீர் அந்தப்பாவியிலங்கையை நோக்கிச்சென்று இரதங்கொண்டுவருவான் நாம் ஜாக்கிறதையாயிருக்க வேண்டுஞ் சுவாமி.

இராவணன் விருத்தம்.

மந்திரி மகோதராகேள் மைந்தனேயாகஞ்செய்ய
முந்தியே சென்றுனின்னம் முடிந்ததோயிலையோகாணேன்
மந்திகளாலுமந்த மனிதர்களாலுந்தீங்கு
வந்ததோவதுவுந்தோணேன் வழுத்துவாயிதற்குமாறே.

வசனம்.

மந்திரி மகோதரா நிகும்பலையாகத்திற்குச் சென்ற என் மைந்தன் இன்னம் வரயில்லை மனிதர்களாலுங் குரங்குகளாலும் ஏதாவது தீங்குற்றதோ தெரியவில்லை மந்திரி.

மகோதரன் வசனம்.

சுவாமி அதோ அதிகவருத்தத்துடன் பாதசாரிபாய் வருகின்றவர் தங்கள் மைந்தராகிய இந்திரஜித்துதான் சுவாமி.

இந்திரஜித்து தரு.

ஆண்டிப் பண்டாரம் என்ற மெட்டு.

தவித்துவந்தேனே மனங் கொதித்துநொந்தேனே
தண்டாமரைப்பதனே சருணையியாகுதனே
தையலாமந்த செய்யமகள்மேல்
மையலைக்கொண்டு வைத்தாயேவப்பு தி

சாமிராமன்பெருமை சாற்றப்போமோதிறமை
தருந்ததம்பியும் மிகுந்தமந்தியும்
குவிந்தகூட்டத்தால் தகைத்ததாலே த

யாகமதையழித்தார் சோகமிதைக்கொடுத்தார்
யாருமெதிரில்லா போரினில்வல்லவர்
கூரிடநல்லவர் பாரினிற்பயந்து த

சீதைசிறைவிடுவாய் க்ஷேமமதுபடுவாய்
தேவரோவல்ல மூவரோசொல்ல
சேவித்திடவந்த காவலரோயிவர் த

வசனம்.

தந்தையே உன்தம்பியாகிய விபீஷணன் கலகத்தால் இலக்ஷ மணன் வானரசைன்யங்களுடன் வந்து என்யாகத்தை யழித்து என்னையும் சித்திரவதை செய்தார் ஆதலால் நாம இனி அவ்விரு மனிதரையும் ஜெயிக்கமுடியாது சீதையைவிட்டு அவரை சரணு கதியடைவோம் தந்தையே.

இராவணன் தரு-ஆதிதாளம்-நாட்டை-இராகம்.

அடடா அடடாபயலே உன தாண்மையழிந்ததென்னசெயலே
அண்டமுகடுவரை கொண்டபுகழ்குறைய
விண்டுமனமரிய தொண்டுசெயவுரைத்தாய்
பண்டுவினைப்படியே சண்டனணுகுவானே
கொண்டகருத்தைவிடு தெண்டமெனமனிதர்
மண்டி யெதிர்த்திடுவேனின்று
மயங்காது நீ நின்று

மனிதரைகனிவொடு தனியெனபேசி
வனிதையைவிடுமென வனுமதிகேட்டாய்
இனிவிடப்போமோ மனுமுறையாமோ
முனைமுகம்யானே முன்னமேசெல்வேன் அ

இராவணன் விருத்தம்.

சீதையைவிட்டுவிட்டால் ஜெகத்திலென்புகழேசாகும்
பேதையைப்போலேசொன்னாய் ப்ரம்மமேவந்ததென்று
காதையதுண்மையாகிற் கடவுள்பேருள்ளநாளும்
மேதினிதனிலேநல்ல மேன்மையாம்புகழேபூண்பேன்.

இந்திரஜித்து தரு.

அய்யாபழனியபலே என்ற மெட்டு.

தந்தா தாமரை பொற்பாதா வுந்தன்
தாள்பணிந்தேனே பிரக்யாதா
சிந்தாகுலந்தீர்ப்பேன் தாதா சிவ
பக்தஞான விநோதா த
எந்தாநானேசெல்லுவே னங்கு நீ
ரிருப்பீர்மனம்பொருத்து யிங்கு
உந்தன்மனம்போலே சென்று ஒரு
நிமிஷத்தில்வாரேநான் கொன்று த
கோபங்கொள்ளாதீரென்மேல் தீரா
குலவும்போர்விஜயத்தின் மாரா
பூபதியேவாரந் தாரும் உந்தன்
பொன்னடியைபணிந்தேன் பாரும் த

இந்திரஜித்து வசனம்.

தந்தையே தாங்கள் என்பேரில் கோபங்கொள்ளவேண்டாம் இதோ நான் சென்று அவர்களை வதைத்து வருகின்றேன் எனக்கு விடையளிப்பீர் தந்தையே.

இராவணன் வசனம்.

அப்படியே சீக்கிரஞ்சென்று அன்னவர்களை சித்திரவதை செய்வாயாக.

இந்திரஜித்து - தரு.

## தந்தையே என்ற மெட்டு.

அரனே ஆதரித் தருளுவாய்பரனே
அங்குசென்றவரிந் தவரவிலை அழிந்தாரே
அழிந்தாரேயவர் அழிந்தாரேயவர்
பழிவைத் திவர்மேல் அ
போகபூமியில் சாகமனமுடன்
போரேன்போரேன் ரதமீதில் போரேன்
ரதமீதில் தேரேனினிமேல் அ
பாவிதந்தையால் ஆவிதுரந்திடபற்றினேன்
பற்றினேன்வில்லை பற்றினேன்வில்லை
வற்று தளமுடன் அ
மாதினுசையால்மேதினிதனில் மலைந்துமே
மலைந்துமேதான் மலைந்துமேதான்
இலங்கை யழித்தானே அ

வசனம்.

அ ஆ இனிநாம் சோர்வடைவதிற் ப்ரயோசனமில்லை நாமோ இப்பொழுது போர்முனைக்கு வந்துவிட்டோம் இனி நாம் தவத்தினுல் பெற்ற படைகளைக்கொண்டு இதோ நிற்கும் இலட்சுமணனையும் அன்னவனைச் சூழ்ந்திருக்கும் வானரசைன்யங்களையும் சின்னபின்னப்பட அடிப்போம்.

இலட்சுமணர் தரு.

## எனதாருயிர் நேசா என்ற மெட்டு.

எழில்சேரும்ப்ரதாப இலங்கைக்கதிபதியேஇப்போ
திடியொடுமாருதம் படிமேல்
தடதடவென வொலிசெய்திட
திடமுடனேவருபவன் தீரமதைசெப்பிடுவாய் எ
செழிக்கும்லங்காபுரி சேயனுளித்தனன்
தேர்வரும்வேகத்தை பாருமுத்தேசத்தால்
தேயுரைத்திடுந் திசைமுகன்பேரனே
செந்திருநாயகன் நொந்திடதந்திடு
வஞ்சகன் ருனே எ

விபீஷணர் வசனம்.

சுவாமி அந்த மாயக்கள்ளனாகிய இந்திரஜித்தேவந்தவன் அவனை இனி அப்புரம் போகவிடாமல் சிரத்தை அருத்துத் தள்ளுவீர்சுவாமி.

இந்திரஜித்து விருத்தம்.

அலைகடல்சூழுமிந்த அவனியில்வீரரென்று
துலங்கிடுமிலங்கைமீது தோன்றினீரெங்கள்வீரம்
விலங்கிடுமென்கரத்தின் வில்விதின்வாளியாலே
குலைந்திடச்செய்தேவுங்க ளாவியுங்குடிப்பேன்பாராய்

இலட்சுமணர் தர்க்கப்-தரு.

சாரங்கந்தன் என்ற மெட்டு.

வீரங்கொண்டுவந்தாய் சோரத்தனமாகவோடி முன
மேகத்துடன்மறைந் தாரைச்சதமெனநாடி
வேகங்கொண்டுவந்தாய் சாகத்துணிந்துநீ
வீழத்தலைவாளித்தொட கோழைத்தனமாகாதினி வீ

இந்திரஜித்து தரு.

கோழையாநானுன்னை வாழைப்பழமாகக்கொண்டு இந்த
குரங்கின்சேனையைக் கற்கண்டாகவேயுண்டு
கோபந்தணிந்துநான் லாபமடைந்திட
கொல்லுங்கணை வில்லில்தொட
அல்லல்வருஞ் செல்லாதினி கோ

லட்சுமணர் தரு.

விட்டகணைதன்னைபட்டுவிழும்படிமாட்டி வெறும்
வீணனேசேனையழிந்திடவே யிதோவாட்டி
வென்றேனானுந்தனை பொன்றேன்ரதமதை
வெயிலோன் குணதிசையில்வர
அயிலாலினி யொழிவாயரி வி

இந்திரஜித்து தரு.

தேருடனேசேனை யாவுதவியும்வேண்டேன் இதோ
தேவரரிந்திட வச்சிரக்கவசம்பூண்டேன்
செயித்திடநானுன்னை வானத்திமேல்நின்று
திரமாகிய சரமேவினேன்
சூரரானவர் புரங்காட்டிட தே

இலட்சுமணர் தரு.

மறைந்துசரம்விட்டவுந்தன் காமதைபோக்கி செய்யும்
மாயப்போருபாயங் கெட்டிடவேஅதைநீக்கி
மாதவராதியாம் வேதியர்களிக்க
மாட்டிச்சர மோட்டிக்கரங்
காட்டித்திரம் பூட்டியுரம் ம

இந்திரஜித்து தரு.

பூட்டுமுன்னுரத்தை போக்குகின்றேனிதோபாராய் இரு
புவியிலென்னாளும் புகழ்நிறைந்திடச்சீராய்
போகபூமியருஞ் சோகமடைந்திட
பொருதும்படை யழியும்படி
விரைவிற்பொடி யாகும்நொடி பூ

லட்சுமணர் வசனம்.

அ ஆ இவன்வீரத்தை நமது ஒரு நாவால் விள்ளுவதரிது ஆதலால் இவன் சிரத்தை அறுத்து நமது தமயன் பாதகாணிக்கையாய் வைக்க சரத்தை விடுப்போம்.

லட்சுமணர் தரு.

மன்றுளாடியவா என்ற மெட்டு-ரூபகம்

ஆதியானவா தேவாதியானவா
சோதிசுயமான ரூப சுடரொளியதுண்மையாகில் ஆ
வேதியர்க்கும்மத வாதியர்க்குந்தெய்வம்
நீதியாகராம மந்திரமென்பது
நிச்சயமாகினி விச்சரமவனை
பக்ஷித்திட லட்சயத்தொடு
பாதமோதியாவி கொள்ள ஆ

கம்பராமாயண கவி.

மறைகளேதோதத்தக்க வேதியர்வணங்கற்பால
இறைவனிராம னென்று நல்லரமூர்த்தியென்னின்
பிறையெயிற்றிவனைக்கோறி யென்றொருபிறைவாய்வாளி
நிறையுரவாங்கிவிட்டா னுலகெலாநிறுத்தினின்றான்.
நேமியுங்குலிசவேலு நெற்றியினெருப்புக்கண்ணன்
நாமவேலுனுமற்றை நான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச் சென்றவன்சிரத்தைதள்ளிப்
பூமழைமாரிசிந்தப் பொலிந்ததப்பகழிப்புத்தேள்.

இந்திரஜித்துவதம் முற்றிற்று.

இனி ராவணவதமும்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகமும் வெளிவரும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

121143

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

பூலோகவினோதமென்னும்

# ஜாலரத்னாகரம்.

இப்பூலோகத்தில் ஆச்சரியப்படத்தக்க ஜால வினோதங்கள் அநேகமிருக்கினும் அவ்வித வித்தைகளை தாம் தாமே செய்து தங்கள் பிரமைகளை நிவர்த்தி செய்துக்கொள்ளும் பொருட்டு பூலோக வினோதமென்னும் ஜாலரத்னாகரத்தை ஒவ்வொருவரும் வாங்கி இன்பத்தை யடையவேண்டியது அவசியம். இதில் காணும் ஒவ்வொரு ஜாலவிநோத வித்தைகளையும் அனுபோகமாகச் செய்து பார்த்து மனோதிர்ப்தி யடைந்து மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிப்பது உசிதம் ஆதலால் அவ்வித வித்தைகளடங்கிய இப்புத்தகத்தை ஒவ்வொருவருங் கண்ணுறாவிடில் ஆவலடங்காது. இதை ஒரு முறை வாசித்தவுடன் இந்திர, தந்திர, மஹேந்திர வித்தைகள் செய்யயூகைகள் உண்டாவதுடன் அற்புதமான ஜாலங்கள் செய்ய உடனே முயலுவார்கள். இதில் அடங்கிய விஷயங்களை எழுதவிரியுமாதலால் சுருக்கிச் சொல்லுவாம். அட்டமாசித்திகள் செய்யலாம், வசியவகைகள் செய்யலாம், மணலை கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திர ஜாலம் செய்பலாம் இந்திரஜால பட்டணங்களைத் தோன்றச் செய்தல் நினைந்த தேவர்களை காட்டலாம் கோகர்ணவித்தை கண்கட்டு ஜாலம் பாதாள அஞ்சனம் செய்தல் சர்வ வசியம் பச்சைப்பாம்பு மேய்தல் பேயோட்டுதல் மாஞ்செடி முளைத்தல் வயிற்றில் நூல் எடுப்பது ஜாலகாரடி வித்தைகள் பாதாள மை ஜாலம் மாரண ஜாலம் மோடிவைக்கும் வித்தை மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம் சத்துரு நாசமாகும் ஜாலம் காசுகள் உண்டாகும் வித்தை இருட்டில் சூரியனைக் காட்டும் ஜாலம் முப்பு செய்யும் ஜாலம் சர்வ வாத்திய ஜாலம் மணலை அல்வா செய்யும் ஜாலம் இராஜவசியம் எக்காளம் வாசிக்கும் ஜாலம் குட்டிச் சாத்தான் ஜாலம் வழக்குகள் வெல்லும் ஜாலம் பூதபிசாசுகள் விலகும் ஜாலம் சொக்குத்தூள் ஜாலம் குறிசொல்லும் ஜாலம் ஷை ஜாலங்கள் ஒவ்வொன்றைக்கொண்டு பத்து பதினைந்து ஜாலங்கள் செய்யும்படியாய் சுமார் 2000 வித்தைகள் அடங்கி யிருப்பதுடன் மூலிகையின் பெயர் அதன் அடையாளமும் சுப்ரமணியர் மூலமந்திர சக்கரங்களுடன் அடங்கியிருக்கின்றது. இதன் விலை ரூபா 1 0 0

---

எமது விலாசம்:—வே. ஜெயவேலு முதலியார்,

நெ. 29, ஆரிமுத்துமேஸ்திரிவீதி, சூளைபோஸ்டு மதராஸ்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

# பூலோக விநோதமென்னும்

# ஜால ரத்நாகரம்.

இப்பூலோகத்தில் ஆச்சரியப்படத்தக்க ஜாலவிநோதங்கள் அநேகமிருக்கினும் அவ்வித வித்தைகளை [illegible]ரம தாமே செய்து தங்கள் பிரமைகளை நிவர்த்தி செய்துக்கொள்ளும் பொருட்டு பூலோக விநோதமென்னும் ஜால ரத்நாகரத்தை ஒவ்வொருவரும் வாங்கி இன்பத்தை அடையவேண்டியது அவசியம். இதிலகாணும் ஒவ்வொரு ஜாலவிநோத வித்தைகளையும் அநுபோகமாகச் செய்துபார்த்து மனோதிர்ப்தியடைந்து மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிப்பது உசிதம் ஆதலால் அவ்வித வித்தைகளடங்கிய இப்புத்தகத்தை ஒவ்வொருவருங் கண்ணுராவிடில் ஆவலடங்காது. இதை ஒரு முறை வாசித்தவுடன் இந்திர, தந்திர, மஹேந்திர, வித்தைகள் செய்ய யூகைகள் உண்டாவதுடன் அற்புதமான ஜாலங்கள் செய்ய உடனே முயலுவார்கள். இதில் அடங்கிய விஷயங்களை எழுத விரியுமாதலால் சுருக்கிச்சொல்லுவோம். அட்டமாசித்திகள் செய்யலாம் வசிய வகைகள் செய்யலாம் மணலை கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திர ஜாலம் செய்யலாம் இந்திர ஜாலம் பட்டணங்களைத் தோன்றச் செய்தல் நினைத்த தேவர்களைக் காட்டலாம் கோகர்ன வித்தை கண்கட்டு ஜாலம் பாதாள அஞ்சனம் செய்தல் சர்வ வசியம் பச்சைபாம்பு மேய்தல் பேயோட்டுதல் மாஞ்செடி முளைத்தல் வயிற்றில் நூல் எடுப்பது ஜால காரடி வித்தைகள் பாதாள மை ஜாலம் மாரண ஜாலம் மோடி வைக்கும் வித்தை மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம் சத்துரு நாசமாகும் ஜாலம் காசுகள் உண்டாகும் வித்தை இருட்டில் சூரியனைக் காட்டும் ஜாலம் முப்பு செய்யும் ஜாலம் சர்வ வாத்திய ஜாலம் மணலை அல்வா செய்யும் ஜாலம் இராஜவசியம் எக்காளம் வாசிக்கும் ஜாலம் குட்டிச்சாத்தான் ஜாலம் வழக்குகள் வெல்லும் ஜாலம் பூதப்பிசாசுகள் விலகும் ஜாலம் சொக்குத்தூள் ஜாலம் குறிசொல்லும் ஜாலம் ஷை ஜாலங்கள் ஒவ்வொன்றைக்கொண்டு பத்து பதினைந்து ஜாலங்கள் செய்யும்படியாய் சுமார் 2000 வித்தைகள் அடங்கியிருப்பதுடன் மூலிகையின் பெயர் அதன் அடையாளமும் சுப்பிரமணியர் மூலமந்திர சக்கரங்களுடன் அடங்கியுள்ளது. இதன் விலை ரூபா 1.

---

விலாசம் :— வே. ஜெயவேலு முதலியார்,

நெ. 29, ஆரிமுத்து மேஸ்திரி வீதி, சூளை போஸ்டு, மதராஸ்.